பக்கங்கள்: பத்து
Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

விலை ரூபா.7.00

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | தை 25 | ஞாயிற்றுக்கிழமை | (08-02-2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 51

துரித தபால்,பொதிகள் சேவை
உள்ளூர் வெளிநாடுகளுக்கான
சகல தபால்;பார்சல்கள் எதுவானாலும்
உடனுக்குடன் அனுப்புவதற்கு
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
Computer Systems
303, K.K.S. ROAD, JAFFNA
T.P : 021-222 2670
FAX: 222 3214
Email-del-smskr@eureka.lk

# பாராளுமன்றம் கலைக்கப்பட்டது

## ஏப்ரல் 2இல் தேர்தல்



(நமது நிருபர்)

சுதந்திர இலங்கையின் பன்னிரண்டாவது பாராளுமன்றம் நேற்று நள்ளிரவு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவினால் கலைக்கப்பட்டது.

பாராளுமன்றம் கலைக்கப்படுவது தொடர்பான விசேட வர்த்தமானி அறிவித்தலையும் நேற்று நள்ளிரவு வெளியிட்டார்.

பதின்மூன்றாவது பாராளுமன்றத்திற்கான வேட்பு மனுக்கள் இம் மாதம் 17ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் 24ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை தாக்கல் செய்யப்படும். ஏப்பிரல் மாதம் 2ஆம்திகதி வெள்ளிக்கிழமை தேர்தல் நடைபெற்று 22ஆம் திகதி வியாழக்கிழமை புதிய பாராளுமன்றம் கூடுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

பன்னிரண்டாவது பாராளுமன்றம் எந்நேரமும் கலைக்கப்படலாம் என்ற பல்வேறு ஊகங்களின் மத்தியிலும், தென்னிலங்கையில் அரசின் நடவடிக்கைகளுக்கு எதிரான பல்வேறு உண்ணாவிரதப் போராட்டங்கள், தொடர் வேலைநிறுத்தங்களின் அழுத்தங்கள், வாழ்க்கைச் செலவு உயர்வு என்பவற்றின் மத்தியில் ஜனாதிபதி தனது விசேட அதிகாரத்தின் மூலம் பாராளுமன்றைக் கலைத்துள்ளார்.

ஐக்கிய தேசிய முன்னணியும் பொது ஜன ஐக்கிய முன்னணியும் இணைந்து தேசிய நல்லிணக்க அரசொன்றை அமைப்பதற்கு ஜனாதிபதி எடுத்த முயற்சிகள் தோல்விகண்டதையடுத்து முக்கிய மூன்று அமைச்சுப் பொறுப்புக்களை விசேட அதிகாரங்களைப் பயன்படுத்தி ஜனாதிபதி தன்வசமாக்கிக் கொண்டதன் பின்னர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா (10 ஆம் பக்கம் பார்க்க)

### 116 வயது மூதாட்டி மரணமானார்

(கொழும்பு)

இலங்கையில் அதிகூடிய வயதினையுடையவர் எனக் கருதப்பட்ட எங்கை நோனா என்ற பெண் நேற்று காலமானார்.

1888ம் ஆண்டு பிறந்த இவருக்கு வயது 116. கொழும்பிலிருந்து 60மைல் தொலைவில் உள்ள நுனா வட்டன கிராமத்தைச் சேர்ந்த எங்கை நோனா என்ற இப் பெண்ணே இலங்கையில் அதிகூடிய வயதுப் பெண் என பதிவு செய்யப்பட்டிருந்தார். (க)

### திருகோணமலைக்கு இன்று பியூறு ஹெவ்டே விஜயம்

(கொழும்பு)

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ரொண்ட் பியூறு ஹெவ்டே விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளைச் சந்திப்பதற்கு இன்று திருகோணமலைக்கு விஜயம் செய்யவுளளார்.

அங்கு விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளையும்,இராணுவத் தரப்பினரையும்,மாவட்ட யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுப் பிரதிநிதிகளையும் தனித்தனியே அவர் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்த (10ஆம் பக்கம் பார்க்க)

### 122 வருடங்களுக்குப்பின்னர் இன்று வெள்ளிக்கிரகம் கடப்பதை இலங்கையர் பார்க்கலாம்

(கொழும்பு)

122 வருடங்களிற்குப்பின்னர் வெள்ளிக்கிரகம் இன்று அதிகாலை 5.15 மணியளவில் பூமியைக் கடந்து செல்வதை இலங்கையர் அவதானிக்க முடியுமென சிரேஷ்ட வானியலாளர் அனுரா சி.பெரேரா தெரிவித்திருக்கிறார்.

இது மிகவும் அரிதான நிகழ்வாகக் கருதப்படுகின்றது. இன்று அதிகாலை 5.15 மணி முதல் பிற்பகல் 1.50 மணிவரை இலங்கையர் இதனை அவதானிக்க முடியும் இதை அவதானிக்கும் போது கறுப்பு நிறக் கண்ணாடி அணிந்திருக்க வேண்டும்.

வெள்ளிக்கிரகம் பூமியைக் கடந்து செல்வது முதன் முதலாக பிரபல வானியலாளர் சேர் எட்மன் ஹலேயினால் 1716இல் அறியப்பட்டது இதன் பின் இந் நிகழ்வு மூன்று தடைவகள் மட்டுமே இடம் பெற்றுள்ளது. (இ-6)

### கிழக்குப் பல்கலைக் கழகத்தில் தொடரும் இராஜினாமாக்கள்

(மட்டக்களப்பு)

கிழக்குப் பல்கலைக் கழக மிருக விஞ்ஞானத்துறைத் தலைவர் கலாநிதி ஜெயலிங்கவதனி சின்னையா தனது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார்.

இவர் தனிப்பட்ட காரணங்களைக் காட்டியே தனது இராஜினாமாக் கடிதத்தை பல்கலைக் கழக நிர்வாகத்திடம் கையளித்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கிழக்குப் பல்கலைக் கழக கலை கலாசாரப் பீடாதிபதி கலாநிதி அம்மன்கிளி முருகதாசும் அப் பதவியில் இருந்து இராஜினாமச் செய்யப் போவதாக பல்கலைக் கழக நிர்வாகத்திற்கு அறிவித்தல் கொடுத்துள்ளார்.

கிழக்குப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் எம்.எஸ்.மூக்கையா இராஜினாமச் செய்ததைத் தொடர்ந்து இந்த இராஜினாமாக்கள் நடைபெற்று (10ஆம் பக்கம் பார்க்க)

### ஹண்டர்-மோட்டார் சைக்கிள் மாங்குளத்தில் மோதி விபத்து ஸ்தலத்தில் இருவர் பலி

(கிளிநொச்சி)

ஹண்டர் வாகனமும் மோட்டார் சைக்கிளும் நேருக்குநேர் மோதி விபத்துக்குள்ளானதில், மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த இருவரும் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

இக் கோர விபத்துச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் 2மணியளவில் மாங்குளம் குஞ்சுக்குளப் பகுதியில் இடம் பெற்றது.

சம்பவத்தில் நாலாம் வட்டாரம் வேலணை கிழக்கைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை நாகேந்திரராசா (வயது54) சங்கரத்தை வட்டுக் கோட்டையைச் சேர்ந்த தர்மலிங்கம் செல்வகுமார்(வயது 32) ஆகிய இருவருமே உயிரிழந்தவர்களாவர். இவர்கள் இருவரது சடலமும் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

புளியங்குளத்தில் இருந்து வந்து கொண்டிருந்த மோட்டார் சைக்கிளும் வவுனியா நோக்கிச் சென்று (10ஆம் பக்கம் பார்க்க)

## எந்தத் தேர்தலையும் சந்திக்க ஐ.தே.கட்சி தயாராகவுள்ளது



### அமைச்சர் மகேஸ்வரன் வலம்புரிக்குத் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா அரசியல் யாப்பின் நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி சமாதான முயற்சிகளைப் பாதிப்படையச் செய்யும் வகையில் பாராளுமன்றத்தைக் கலைத்தமை, கவலைதரும் நடவடிக்கை என்றும் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் வருத்தம் தெரிவித்தார்.

பாராளுமன்றம் நள்ளிரவு கலைககப்பட்டமை குறித்து அமைச்சரிடம் தொடர்பு கொண்டு கேட்ட போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்; பாராளுமன்றம் கலைக்கப்பட்டமையை நான் வரவேற்கவில்லை. ஏனெனில் சமாதான சூழலில் அதனைப் பாதிப்படையச் செய்யும் வகையில் (10ஆம் பக்கம் பார்க்க)

## சுதந்திர முன்னணியின் பட்டியல் தேர்தல் ஆணையாரிடம் கையளிப்பு

(கொழும்பு)

புதிதாக உருவாக்கப்பட்ட ஐக்கிய மக்கள் முன்னணி நேற்று வெள்ளியன்று தமது கட்சியின் புதிய தலைவர்களின் பெயர்ப் பட்டியலை, தேர்தல்கள் ஆணையாளரிடம் சமர்ப்பித்துள்ளதுடன் தமது கட்சியின் சின்னம் வண்ணத்துப் பூச்சி என்றும் பதிவு செய்து கொண்டனர்.

இப் புதிய கூட்டணித் தலைவராக ஜே.வி.பியை சேர்ந்த நந்தன குணதிலகவும் பிரதித் தலைவராக விஜித ஹேரத்தும் நியமிக்கப்படட்டுள்ளனர். செயலாளராக சுசில் பிரேமஜெயந்தவும் பிரதிச் செயலாளராக பிமல் ரத்னாயக்காவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அனுரா பண்டாரநாயக்கா தேசிய அமைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இப் பெயர்ப் பட்டியல் சட்டத்தரணி ஸ்ரீபதி சூரியாராய்சசியினால் தேர்தல் ஆணையாளரிடம் (10ஆம் பக்கம் பார்க்க)

# கிரிக்கெற்துறை நடுவர் பணியிலிருந்து வெங்கட்ராகவன் ஓய்வு பெறுகிறார்

கிரிக்கெற் உலகின் பிரசித்தி பெற்ற நடுவர்களில் ஒருவரான இந்தியாவின் சிறிநிவாஸ் வெங்கட்ராகவன் சர்வதேச கிரிக்கெற் போட்டிகளில் இருந்து ஓய்வுபெறுவதாக சர்வதேச கிரிக்கெற் பேரவை அறிவித்துள்ளது.

அவுஸ்திரேலிய அணிக்கும் இலங்கை அணிக்கும் இடையே அடுத்த மாதம் கண்டி அஸ்கிரிய மைதானத்தில் நடைபெறவுள்ள இரண்டாவது டெஸ்ட் போட்டியே வெங்கட் ராகவன் நடுவராகக் கடமையாற்றும் இறுதி டெஸ்ட் போட்டியாக அமையவுள்ளது.

20 ஆண்டுகளுக்கு மேலாக நடுவராகக் கடமையாற்றும் வெங்கட்ராகவன் 75 டெஸ்ட் போட்டிகளிலும் 52 ஒருநாள் சர்வதேச போட்டிகளிலும் நடுவராகக் கடமையாற்றியுள்ளார். வெங்கட் ராகவன் கிரிக்கெற் வரலாற்றில் மிகச் சிறந்த நடுவர்களில் ஒருவராகப் பதியப்படுவார் என சர்வதேச கிரிக்கெற் பேரவையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மல்க்கம் ஸ்பீட் தெரிவித்துள்ளார்.

வெங்கட் என கிரிக்கெற் உலகில் அறியப்பட்ட இவர் கிரிக்கெற் வீரராக 57 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியதோடு 15 ஒருநாள் சர்வதேச போட்டிகளிலும் விளையாடியுள்ளார். 1964-1965ஆம் ஆண்டு பருவகாலத்தில் தனது 19வது வயதில் நியூசிலாந்திற்கெதிராக கிரிக்கெற்போட்டிகளில் அறிமுகமான வெங்கட்ராகவன் 1983-1984ஆம் ஆண்டு பருவகாலத்தில் பாகிஸ்தான் அணிக்கெதிரான போட்டியுடன் தனது 38ஆவது வயதில் வெங்கட்ராகவன் ஓய்வு பெற்றார்.(யே-68)

# ஊர்காவற்துறைப் பிரதேச கரப்பந்தாட்டப் போட்டி

வடக்குக் கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடாத்தப்படும் ஊர்காவற்துறை பிரதேச மட்ட விளையாடடுப் போட்டி நிகழ்வுகளில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல ஊர்காவற்துறை பொது அரங்கு முன்றலில் கரபந்தாட்டப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

ஆண்கள், பெண்கள் ஆகிய இரு பிரிவுகளிலும் நடாத்தப்படவுள்ள இப் போட்டி நிகழ்வுகளில் கலந்து கொள்ள விண்ணப்பித்த ஊர்காவற்துறை பிரிவின் கழகங்களை உரிய நேரத்தில் போட்டிகளுக்கு வருகை தருவதன் மூலம் பங்குபற்றும் வாய்ப்பினை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு ஊர்காவற்துறை உதவி அரசாங்க அதிபர் கே.எக்ஸ்.செல்வநாயகம் கேட்டுள்ளார். (யே-68)

# வீனஸ் வில்லியம்ஸ் மீண்டும் உபாதைக்குள்ளாகியுள்ளார்

டோக்கியோவில் நடைபெற்று வரும் பகிரங்க டெனிஸ் சுற்றுப் போட்டியின் மகளிர் கால் இறுதிப் போட்டியில் இருந்து உலகப் புகழ் பெற்ற டெனிஸ வீராங்கனை வீனஸ் வில்லியம்ஸ் விலக்கிக் கொள்ளவுள்ளார். உலக டெனிஸ் வீராங்கனைகளுக்கான தரப்படுத்தல் பட்டியலில் முதலாமிடத் தினை முன்னர் வகித்த வீனஸ் வில்லியம்ஸ் உபாதைக்குள்ளானதன் காரணத்தினாலேயே இந்தப் போட்டித் தொடரில் இருந்து விலக்கிக் கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீனஸ் வில்லியம்ஸ் இது வரை நான்கு கிரான்சலாம் பட்டங்களை வென்றெடுத்திருப்பதோடு கடந்த 2000ஆம் மற்றும் 2001ஆம் ஆண்டுக்கான விம்பிள்டன் போட்டிகளிலும் அமெரிக்க பகிரங்க டெனிஸ் போட்டிகளிலும் வெற்றிபெற்றிருக்கிறார்.

எனினும், கடந்த ஆண்டில் அவுஸ்திரேலிய பகிரங்க டெனிஸ் போட்டியில் மூன்றாவது சுற்றுப் போட்டியின் போதே வீனஸ் அதிர்ச்சித் தோல்வியடைந்து வெளியேறியிருந்தார்.

மேலும் தனது சகோதரியான செரீனா வில்லியம்சிடமும் நான்கு சர்வதேசதர டெனிஸ் இறுதிப் போட்டிகளின் போதும் வீனஸ் வில்லியம்ஸ் தோல்வியடைந்திருப்பதோடு, கடந்த ஆண்டில் நடைபெற்ற போட்டியின் போதும் தனது சகோதரியுடனான இறுதிப் போட்டியில் கடுமையாகப் போராடியிருந்தார். எனினும் தற்போது உலக மகளிர் டெனிஸ் தரப்படுத்தல் பட்டியலில் அமெரிக்க வீராங்கனைகளைப் பின் தள்ளிவிட்டு பெல்ஜிய வீராங்கனைகள் முன்னணி வகிப்பது குறித்து தனது ஆதங்கத்தினை வீனஸ் வில்லியம் வெளியிட்டிருந்தமையும் இங்கு குறி ப்பிடத்தக்கது. (யே-68)

# உலக அதிபார குத்துச் சண்டை வீரர் லெனெக்ஸ் லூயிஸ் ஓய்வு பெறுகிறார்

உலக அதிபாரக் குத்துச் சண்டை வீரரான லெனெக்ஸ் லூயிஸ் சர்வதேச குத்துச் சண்டைப் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறப் போவதாகத் தெரிவித்துள்ளார். கனேடிய வீரரான லெனெக்ஸ் லூயிஸ் இது வரை 44 பிரதான போட்டிகளில் பங்கு பற்றியிருப்பதோடு அதில் 42 போட்டிகளில் வெற்றிபெற்று சர்வதேசதர குத்துச் சண்டை வீரர்களில் தனக்கென சிறப்பான ஓரிடத்தினைப் பெற்றிருக்கிறார்.

இவர் 1988ஆம் ஆண்டு சியோலில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளின் போது தங்கப் பதக்கம் வெனறுள்ளதோடு, 1992ஆம் ஆண்டு உலகக் குத்துச் சண்டைச் சம்பியன பட்டத்தையும் வென்றெடுத்துளளமை குறிப்பிடத்தக்க விடயமாகும். 2002ஆம் ஆண்டு நடைபெற்ற உலக அதிபார குத்துச் சீண்டைப் போட்டியின் போது 8ஆவது சுற்றில பிரபல வீரான மைக்டைசனை வெற்றி பெற்றார்.

தற்போதைய உலக குத்துச் சண்டை வீரரான இவாண்டர் ஹொலிபீல்ட், குத்துச் சண்டை விளையாட்டின் ஒரு சகாப்தமென லெனெக்ஸ் பாராட்டியிருப்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும். உலக அதிபாரக் குத்துச் சண்டை வீராக இருக்கும் போதே ஓய்வு பெறும் முதலாவது கனேடிய வீரராகவும் உலகளாவிய ரீதியில் நான்காவது வீரராகவும் லெனெக்ஸ் லூயிஸ் தன்னைப் பதிவு செய்து கொண்டுள்ளார். (யே-68)

# அவுஸ்திரேலிய அணியுடன் தலைவர் அணி மோதும்

எதிர்வரும் 16ஆம் திகதி இலங்கை வரும் அவுஸ்திரேலிய அணியுடன் இலங்கை கிரிக்கெற் கட்டுப்பாட்டு சபைத் தலைவர் அணி மோதும் இதற்காக 16பேர் கொண்ட குழுவின் பட்டியல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

அதன் விபரம் வருமாறு; ரசல் ஆல்நோட், அவிஸ்க குணவர்த்தனா, சமன் ஜயந்த, ஜெகான் முபாரக், சாமரசில்வா, பார்க்கியா பெரேரா, பிரசன்ன ஜெயவர்த்தன(விக்கெற் காப்பாளர்) டினுஸ்க பெர்ணான்டோ, சாமள ஹமகே, சரித்த புத்திக, பெர்ணான்டோ, ர்ங்கண ஹேரத், தம்மிக பிரஷாத், தம்மிக சுதர்சன, பிரதீப் ஹேவகே ஆகியோரின் பெயர் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. இப்போட்டி எதிர்வரும் 17ஆம் திகதி மொறட்டுவ ரிரோன் பெர்ணான்டோ மைதானத்தில் இடம் பெறும். (யே-68)


ஓம் ஸ்ரீ ராம ஜெயம்

அருள்வளர் ஸ்ரீ சுந்தரஆஞ்சநேயர் கோயில்

இணுவில்-மருதனார் மடம்

இராஜ கோபுர கும்பாபிஷேக

மங்கள விழா

09-02-2004 திங்கட்கிழமை

ஈழமணித் திருநாட்டில் அழகின் சிகரமென அறிவு போற்றும் யாழ்.பூமி தன்னில், அருளொடு ஆன்மீகம் ஆட்சிசெய்யும் இணுவை மண்ணில், மகிமை பல பொருந்திய மருதனார் மடத்தில்!

ஆகாய வெளியெங்கும் அதிர ஓங்கார நாதம் ஒலிக்கும் இரு மணிமாடத்துடன் கூடி அமைந்து குன்றென எழுந்து இராஜ கோபுரத்திற்கு! நிகழும் சுபானு வருஷம் உத்தராயணம், ஹேமந்த ருது தைத்திங்கள் 26ஆம் நாள்(09-02-2004)திங்கட்கிழமையும் கிருதியைத் திதியும், உத்தர நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய பகல் 12-16 மணி முதல் 2.06 மணிவரையுள்ள இடபலக்ன தேவேந்திர சர்வமங்கள சுபமுகூர்த்த வேளையில் இராஜகோபுரத்திற்கு குட முழுக்காட்டும் பெரு சாந்தி விழா நடைபெற திருவருள் கைகூடியுள்ளதால் பக்தப் பெருமக்கள் இவ்விழாவில் கலந்து கோபுர தரிசனம் கண்டு கோடி புண்ணியம் பெற்று சீரும் சிறப்பும் பெற்று வாழ்வீர்களாக!

**தைத்திங்கள் 25ம் நாள் (08.02.2004) ஞாயிற்றுக்கிழமை**

காலை 9.00 மணி லக்ஷ்மி ஹோமம், கோ பூஜை
மாலை 4.00 மணி தீபபூஜை, சுவாசினி பூஜை,சுமங்கலி பூஜை
மாலை 6.00 மணி யாகபூஜை, ஹோமம்

**தைத்திங்கள் 26ம் நாள் (09.02.2004) திங்கட்கிழமை**

காலை 9.00 மணி சுத்தி புண்ணியாகம், மஹா பூர்ணாகுதி, உபசார பூஜை, வேத, கீத, நாத, கீர்த்தனா
பகல் 12.00 மணி கும்ப உத்தாபனம், வீதியுலா
**இராஜ கோபுர மஹா கும்பாபிஷேகம்,** மூலவர் அபிஷேகம், விஷேட பூஜை, ஆசீர்வாதம், பிரசாதம் வழங்கல்.
பகல் 1.30 மணி அன்னதானம்

**உபயம்:**

**திரு.திருமதி தம்பிராஜா கணேஸ்வரி குடும்பம், Jaffna.**
**மகேஸ்வர பூஜை:அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோவில் Switzerland கிளை சார்பாக;**

திரு.அ.பத்மநாதன் குடும்பத்தினர்
திரு.செ.சீவரட்ணம், (Lusco)
திரு.சு.தியாகராஜா (Assat)
திரு.மு.கனகலிங்கம்(Any Com)
திரு.து.வீஜயராஜா(Any Com)
திரு.த.கோகுலராஜா(Emen Luco)

இ.சுந்தரேஸ்வரக் குருக்கள், A/C No.P6332 Bank Of Ceylon,Chunnakam.

"ராம தூதனைத் துதி செய்ய துன்பங்கள் போம்"

இங்ஙனம்.
சிவஸ்ரீ இ.சுந்தரேஸ்வரக் குருக்கள்
ஆதீனகர்த்தா.

சுன்னாகம், இலங்கை.
021-222 3648

விளம்பர அமைப்பு:தி.சருபன்

[C/7353]



# விளையாட்டுச் செய்திகள்

## உலகக் கிண்ண கரம் போட்டி இவ்வாண்டு இலங்கையில் நடைபெறும்

இவ்வாண்டு ஒக்டோபர் மாதம் இடம்பெறவுள்ள உலகக் கிண்ண கரம் போட்டித் தொடரை நடாத்தும் வாய்ப்பு இலங்கைக்கு கிடைத்துள்ளதாக விளையாட்டுத்துறை அமைச்சர் ஜோன்சன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இலங்கை இந்திய கரம் போட்டித தொடரில் விருது வழங்கும் வைபவத்தில் நேற்றுக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

3போட்டிகள் கொண்ட இலங்கை இந்திய கரம் போட்டித் தொடரில் வெற்றிக் கிண்ணத்தை இந்தியா தனதாக்கிக் கொண்டது. ஆண் பெண் ஆகிய இரு பிரிவுகளில் நடைபெற்ற போட்டிகளில் இலங்கைப பெண்கள் கரம் அணியினரால் எந்த ஒரு வெற்றியையும்,சாதனையையும் பெற முடியவில்லை. இலங்கை,இந்திய ஆண்கள் கரம் அணியின் இறுதிப் போட்டியில் இந்திய அணியின் வீரர் சதீப் தியானுக்கானை இலங்கை வீரர் நிசாந்தபெர்னாண்டோ தோற்கடித் தமை இப் போட்டித் தொடரின் சிறப்பம்சமாகும். இந்தப் போட்டியில் நிசாந்தப் பெர்னாண்டோ 2:1 என்ற ரீதியில் வெற்றி பெற்றார். (வ-121)



நேற்று முன்தினம் அவுஸ்திரேலியாவுக்கும் இந்தியாவுக்கும் இடையில் மெல்பேர்ணில் நடைபெற்ற முதலாவது கிரிக்கெற் இறுதிப் போட்டியில் சர்ச்சின் டெணடுல்கர் ஆட்டமிழக்கும் காட்சி

## கரப்பந்தாட்ட இறுதிப் போட்டி

(யாழ்ப்பாணம்)

அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடாத்தும் அமரர் கனகரத்தினம் ஞாபகார்த்த கிண்ணத்திற்கான கரப்பந்தாட்ட இறுதிப் போட்டி எதிர்வரும 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப 3.30 மணிக்கு அரியாலை சனசமூக நிலைய ஆடுகளத்தில் நடைபெறவுள்ளது. (யே-18)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(வடலியடைப்பு)

வட்டு.இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 11ஆம் திகதி புதன்கிழமை பி.ப 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் ச.இராமலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ள மேற்படி நிகழ்வில், வலி.மேற்குப் பிரதேச செயலர் சி.ர.மோகன்றாஸ், இளைஞர் சேவைகள் மன்ற பணிப்பாளர் சி.சிவதட்சணமூர்த்தி மற்றும் ஓய்வுபெற்ற அதிபர் நா.ஜெயநாயகம் ஆகியோர் விருந்தினர்களாக கலந்துகொள்ளவுள்ளனர். (தி-21)

## சிறுவிளம்பரம்

### மணப் பெண் தேவை

காலசர்ப்பதோஷம், திருவாதிரை 4ம் பாதம், 11ல் செவ்வாயுடைய, 3 சுற்றுக்கும் கிரகபாவம் 28 1/2 கொண்ட, 8.09.1977 ல் பிறந்த தனித் தொழில் புரிபவருக்கு மணப் பெண் தேடுகின்றோம். தகவல்கள் இரகசியமாகப் பேணுவோம். எம்மிடம் சகல பிரிவினருக்கும் பொருந்தமான திருமண ஜாதகக் குறிப்புக்கள் உள்ளன. சேவை இலவசம். சோதிடம் சம்பந்தமான விடயங்களுக்கும் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி -:திரு V.A. சிவராசா சோதிடர் இலக்கம் 01, பழம் றோட், கந்தர் மடம் யாழ்ப்பாணம். (8239)

### பொதுக் கூட்டம்

(வடலியடைப்பு)

நலலூர் முருகன் சனசமூக நிலையத்தின் பொதுக் கூட்டம் கடந்த சனிக்கிழமை மாநகர சபை சமூக உத்தியோகத்தகர் ந.சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் சனசமூகநிலையத்தின் தலைவராக க.குமாரசுவாமியும், செயலாளராக யே.நிரோஷும், பொருளாளராக க.லோகானந்தமும், 15 நிர்வாக உத்தியோகத்தர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். (தி-21)

### தமிழ்மொழிமூல ஆசிரியர் நியமனம்

(கொழும்பு)

தமிழ்மொழி மூல பாடசாலைகளில் நிலவிவரும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் பொருட்டு 2 ஆயிரத்து 500 ஆசிரியர்களை நியமிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணம் தவிர்ந்த ஏனைய பிரதேச தமிழ்மொழி மூலப் பாடசாலைகளுக்கே இந்நியமனம் வழங்கப்படவுள்ளது. (தி-60,10)

# இறைவனை மகிழ்விக்க விரும்பினால் தாழ்மையுள்ள பணி செய்யுங்கள்

இன்றைய காலங்களிலே நாளுக்கொரு செய்தியும் வன்முறை அடிதடிகளும் மனித மனங்களிலே கலக்கத்தை உண்டு பண்ணுகின்



றன. ஏன் மனிதர்கள் இவ்வாறு நடந்து கொள்கின்றார்கள் என்பது புரியாத ஒன்றாக இருக்கின்றது. எல்லா மனிதர்களும் சுதந்திரமாகவும், சமத்துவமாகவும் வாழவேண்டும் என்றே விரும்புவார்கள். பிறர் தங்களுக்குத் தீமை செய்யக் கூடாது என்றே விரும்புவர். இறைவனும் அதனையே விரும்புகின்றார். ஆனால் நடப்பதோ வேறொன்றாகக் காண்கின்றோம். "எளியோர்க்கு நற்செய்தி சொல்லவும், சிறைப்பட்டோர் விடுதலை அடைவர். குருடர் பார்வை பெறவும், ஒடுக்கப்பட்டோருக்கு உரிமை வாழ்வு வழங்கவும், ஆண்டவர் அருள் தரும் ஆண்டினை அறிவிக்கவும் அவர் என்னை அனுப்பினார்'' (லூக்கா 4:18 - 19) என்று யேசு தாமே தம்பணியின் முக்கியத்துவம் பற்றிக் கூறுகின்றார்.

### நற்செய்தி மதிப்பீடுகளே வாழ்வு

இயேசு கிறிஸ்துவின் நற்செய்திப் பணியை தொடர்ந்தாற்றுவதே திருச்சபையின் பிரதான பணியாகும். அதனாலேயே இறை மக்களும் விரும்புகின்றார்கள். திருச்சபையானது கிறிஸ்துவின் மறையுடல் என்று புனித பவுல் குறிப்பிடுகின்றார். உடல் என்பது ஒரு உறுப்பினால் ஆனது அல்ல. திருச்சபையும் ஒரு உறுப்பினால் ஆனது அல்ல. ஒவ்வொரு இறை மக்களையும் உறுப்பாகக் கொண்ட கிறிஸ்துவை தலையாகக் கொண்ட ஒரு உடலாகும். எனவே ஒவ்வொரு உறுப்பும் கிறிஸ்துவைப் பிரதிபலிப்பதாகச் செயற்படவேண்டும். எம கடமைகளைச் சரிவரச் செய்கின்றோமா? இறைமக்களிலிருந்து தலைமை ஏற்போர், அதிகாரம் தாஙகுவோர்வரை பெரும் பான்மையானவர்கள் பிறரை நேசிக்காதவர்களாகவே, சுயநலப்போக்கானவர்களாகவே இருக்கிறார்கள். ஒடுக்கப்பட்டோருக்கு உரிமை வாழ்வு கொடுக்கவந்ததாகக் கூறினார் இயேசு. தலத்திருச்சபையின் பணியாளர்கள் என்று கூறிக் கொள்பவர்கள் நீதி வழங்காத அதிகாரச் செருக்குடையவர்களாக ஏழை, எளியவர்களை புண்படுத்துகின்றவர்களாகவே இன்றும் இருக்கின்றார்கள். புனித பவுல் கூறுவதை இங்கே உற்று நோக்குவோம். "திருச்சபையில் கடவுள் முதலாவது அப்போஸ்தலரையும், இரண்டாவது இறைவாக்கினரையும், மூன்றாவது போதகர்களையும் எற்படுத்தினார்" (1.கொரிந் : 12:28) பணிசெய்ய இதுதான் திருச்சபை செய்யவேண்டிய பணியாகும். இவைகளும் ஆடம்பரமற்ற முறையிலே எம்மை மகிமைப் படுத்த வல்ல இறைவனை மகிமைப்படுத்துவதான, தாழ்மை உள்ள பணியையே இறைவன் விரும்புகிறார்.

## பரமபிதா காட்டிய பாதை

### எம் வாழ்வு பயனுள்ளதாக வேண்டும்

குடித்து, வெறித்துக் கும்மாளம் அடித்து இறை அருளைப் பெற்றுக் கொள்ளமுடியாது. அலங்காரங்களைச் செய்து, அகம்பாவமாகப் பேசி ஆன்மீக வாழ்வுக்கு வழிகாட்ட முடியாது. ஏழையின் கூக்குரலுக்குச் செவிமடுக்காது புறம் தள்ளிப் புறக்கணித்து ஆளுக்கொரு நீதி வழங்கும் போது ஆண்டவன் பணியைச் சரிவரச் செய்யமுடியாது. நாம் அழைப்புப்பெற்ற பணிவாழ்வுக்கு ஏற்றவர்களாக வாழவேண்டுமே அன்றி அழைப்பை புறந்தள்ளி உலகியலைப் பற்றிக் கொள்ள எண்ணக்கூடாது. "எல்லாம் ஞான வளர்ச்சிதர நடைபெறட்டும" என்று புனித பவுல் கூறுகின்றார். "ஆம் நாங்கள் மீட்புப் பெறுவோர் இடத்திலும், அழிவுறுவோர் இடத்திலும் கடவுள் பால் எழும் கிறிஸ்துவின் நறுமணமாய் இருக்கிறோம். (2 கொரிந் 2:15) என்று கூறக் கூடியவர்களாக விளங்குவதே சிறந்ததாகும்.

### உண்மைச் சாட்சியம்

உண்மையான சாட்சியமே எமக்கு மீட்புத்தரவல்லது மனிதத் துவத்தை நேசியாத நிர்வாகச் செருக்குகள் மடை உடைத்த வெள்ளம் போல் அடித்துச் செல்லப்படும். காருண்யமான செயல்களும், கபடம் இல்லாத அன்பும் எதிர்பாராது செய்யப்படும் சேவையும் ஊழியனை புண்படுத்தா ஊதியமும் தக்க சமயத்திலே கைகொடுப்தும் இவை போன்றவையே உண்மையான இறைவன் விரும்பும் சாட்சிய வாழ்வாகும். இதற்கு பல வகையான எதிர்ப்புக்கள் தோன்றும். வசை மொழிகள் பின் தொடரும். ஏன் உயிர் கூடபோகலாம் தொகையைக் கொண்டு தம்பட்டமடிப்பதைவிட. ஊருக்கொரு உத்தமன் இருந்தாலே போதும். சூழும்பகை விலகும். சுற்றத்தில் அன்பு விளங்கும். இயேசுவின் வார்த்தையின் ஒளி பாதை காட்டும் எல்லோரும் கடவுளின் மகிமையைக் காண்பார்கள். □

யாழ். ஜெயம்தாசன்

# மக்கள் ஐக்கிய சுதந்திர முன்னணி மக்களுக்காகவே செயற்படும்

## பொ.ஐ.மு. எம்.பி. உறுதி

(கொழும்பு)

மக்கள் ஐக்கிய சுதந்திர முன்னணியின் கருத்துக்களை அடிப்படையாகக்கொண்டு அமைக்கப்படும் அரசாங்கம் மக்களுக்குப் பாதகமான சட்டங்கள் எதனையும் அமுல் படுத்தாது என பொது ஜனஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித்கேந்தலவிஜய தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், ஐக்கியதேசிய முன்னணி அரசாங்கத்தின் சில சட்ட அமுலாக்கங்கள் மூலம் மக்களுகுள் விரும்பத்தகாத பிரச்சினைகள் உருவாகியுள்ளன இதனை விடுத்து புதிய அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்காகவே பொதுஜன ஐக்கிய முன்னனியும் - ஜே.வி.பியினரும் இணைந்து செயலாற்றுகின்றனர்.

இதைவிட தற்போதைய அரசு பல்வேறு காரணங்களைக்காட்டி மக்கள் வங்கியினை தனியார் மயப்படுத்தத் தீர்மானித்துள்ளமை மக்களைப் பாதிக்குமெனக் குற்றஞ சாட்டியுள்ளார். அரசாங்கத்தின் முயற்சிகைவிடப்படவேண்டும் என்றார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய சிஹல உறுமயவின் பிரசார செயலாளர் விஜய கன்னங்கர, தற்போதைய அரசு நாட்டின் பிரதான வளங்களை அமெரிக்காவிற்கு விற்பனைசெய்ய முயல்கிறது.

வழங்கவேண்டிய கடன்களைத் தள்ளுபடி செய்து இவ்வாறு வளங்களை விற்க முயல்வது நாட்டின் எதிர் காலத்தைப் பாதாளத்தில் தள்ளும் முயற்சியாகும் என்றார்.(தி -60,4)

# இழப்பீட்டுத் தொகையை அதிகரிக்கக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யுத்தம் காரணமாக அழிவடைந்த தமது வீடுகளுக்கு மேலதிக நஷ்ட ஈட்டுத் தொகை வழங்கப்படவேண்டும் என வடபகுதி மக்கள் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்தகால யுத்தத்தினால் சேதமடைந்த தமது வீடுகளுக்கு அரசினால் தற்போது வழங்கப்பட்டு வரும் இழப்பீட்டுத் தொகை போதுமானதாக இல்லை.

தற்போது வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகையாக அரசசேவையாளர்களுக்கு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், ஓய்வூதியர்களுக்கு 1 இலட்சம் ரூபாவும் வழங்கப்படுகின்றபோது, சாதாரண மக்களுக்கு 25 ஆயிரம் ரூபா மட்டுமே வழங்கப் படுகிறது. என்பதை சுட்டிக் காட்டியே அவர்கள் இக் கோரிக்கையை விடுத்துள்ளனர். (தி-04,60)

## இலவச கண்வைத்திய முகாம்

(பருத்தித்துறை)

கரவெட்டிப் பிரதேச மக்களின் நன்மை கருதி வல்வெட்டித் துறை மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்திச் சபை இலவச கண் வைத்திய முகாம் ஒன்றை இன்று ஞாயிற்றுக்கிழமை கரவெட்டிப் பிரதேச செயலகத்தில் நடாத்துகின்றது.

இவ் இலவச கண் வைத்திய முகாமின் போது கண்ணாடி பாவிக்குமாறு சிபாரிசு செய்யப்படும் கண்பார்வை குறைந்த 100 நோயாளர்களுக்கு வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்திச்சபை இலவச மூக்குக் கண்ணாடிகளை வழங்கவுள்ளது.

இவ் இலவச மூக்குக் கண்ணாடிகள் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையில் நடைபெறுமென மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி கே.மயிலேறும்பெருமாள் அறிவித்துள்ளார். (தி-52)

# சுரேஷ் பிறேமச்சந்திரன் பிரதமருடன் சந்திப்பு

(கொழும்பு)

தமிழ் மக்களை அவர்களின் சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்துவதற்கு ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் முன்னுரிமை அளித்து செயற்படுத்தும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா உறுதியளித்துள்ளார்.

தமிழ் மக்கள் எதிர்நோக்கும் நெருக்கடிகள் குறித்து தமிழ் கூட்டமைப்பின் இணைப்பாளர் சுரேஷ் பிறேமச்சந்திரன் நேற்று முன்தினம் பிரதமரைச் சந்தித்து பேச்சு நடத்தினார். இச்சந்திப்பு அலரிமாளிகையில் அரைமணி நேரம் இடம்பெற்றது.

இச் சந்திப்பின் போதே பிரதமர் மேற்கண்டவாறு உறுதியளித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில், இன்றைய நெருக்கடியான காலகட்டத்தில் தமிழ் மக்கள் அரசாங்கத்துடன் ஒத்துழைக்க வேண்டும். சமாதான முயற்சிகளை முன்னெடுத்து, விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடாத்தி தமிழ் மக்களை அவர்களின் சொந்த இடங்களில் குடியமர்த்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்தார். (இ)

# கைதடி முதியோர் இல்லத்தில் மொத்தம் 190 பேர் தங்கி வாழ்வு

(யாழ்ப்பாணம்)

கைதடி முதியோர் இல்லத்தில் தங்கியிருக்கும் முதியவர்களுக்கான புனர்வாழ்வுத் திட்டங்களை அமுல் செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக இல்லத்தின் அத்தியட்சகர் கே.வி.சிவநேசன் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவிக்கும் போது, இல்லத்தில் தங்கியிருக்கும் மொத்தம் 190 பேரில், 109 ஆண்களும், 81 பெண்களும் தங்கியுள்ளனர். இவர்கள் மேற்படி இல்லத்தில் தமது பொழுதுகளை வீணே கழித்துவருகின்றனர். இவர்களில் பலபேர் பல்வேறு விதமான தொழில் அறிவுகள், அனுபவங்களைக் கொண்டுள்ளனர்.

இவர்களின் தொழில் அறிவுகள், அனுபவங்களைப் பயன்படுத்தும் நோக்குடன் அவர்கள் முதுமையில் ஆற்றக்கூடிய பணிகளை மீள ஆரம்பித்துக் கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன.

இந்த வகையில் தும்புத்தொழில், தையல் தொழில், சிறுரக இயந்திரங்கள் திருத்துதல், புத்தகங்கள் கட்டுதல், வர்ணவேலைகள் செய்பவர்கள் ஊக்குவிக்கப் படவுள்ளனர் என்றும் தெரிவித்தார்.

இவ் இல்லத்தில் 190 முதியோர்களையும் பராமரிக்கும் பணியில் 37 ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர். யாழ்ப்பாணக் குடாநாட்டில் சமூக சேவைகள் திணைக்களத்தினால் நடத்தப்படும் ஒரேயொரு முதியோர் இல்லம் இதுவென்பது குறிப்பிடத்தக்கதாகும். (தி-16)

# சட்டதிட்டங்களை திருத்தியமைக்க யோசனை

(கொழும்பு)

நாட்டின் தற்போதைய சட்டதிட்டங்களை, அடிப்படை மனித உரிமைகள், சர்வதேச பிரகடனங்கள் என்பவற்றுக்கு அமைவாக திருத்தி அமைப்பதற்கு தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு திட்டமிட்டுள்ளது.

இதற்கான நிதியை ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தி திட்ட நிதியம் வழங்கவுள்ளது.

நாட்டில் அமுலிலுள்ள பல சட்டதிட்டங்கள் சர்வதேச பிரகடனங்களுக்கு அமைவானதாக இருக்கவிலலை என்பதாலேயே அது குறித்து மனித உரிமைகள் ஆணைக்குழு தீவிரமாக ஆராய்ந்து, அவை எவ்வாறு திருத்தப்படவேண்டும் என்பது பற்றி அரசிற்கு யோசனைகளைக் கூறவுள்ளது. (தி-60,10)

# மணல் விநியோகத்தில் புதிய நடைமுறைகள்

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மணல் விநியோகத்திற்கான புதிய நடைமுறைகள் கொண்டுவரப்படவுள்ளன.

நாளை திங்கட்கிழமை முதல் நடைமுறைக்கு வரவுள்ள மணல் விநி யோகத்திற்கான புதிய அனுமதிப் பத்திரங்களை பருத்தித் துறை தும்பளையில் இயங்கும் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் பெற்றுக கொள்ளலாம்.

அத்துடன், நாளை திங்கட்கிழமை சங்கானை, சண்டிலிப்பாய், யாழ்ப்பாணம் ஆகியவற்றிலும், செவ்வாய்க்கிழமை கோப்பாய், நல்லூர், உடுவில் ஆகியவற்றிலும், வியாழக்கிழமை கரவெட்டி, தெல்லிப்பழை ஆகியவற்றிலும், வெள்ளிக் கிழமை பருத்தித்துறையிலுமுள்ள அரச மற்றும் அரசசார் பற்ற நிறுவனங்களிலும் மேற்படி விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக் கப்பட்டுள்ளது. (தி-35)

## இன்று ஒரு தகவல்

# மூன்று கேள்விகள்

காலம் வெகுவேகமாக ஓடிக்கொண்டிருக்கிறது. உலகம் அதற்கேற்ப மாறிக்கொண்டிருக்கிறது. எத்தனையோ மானிடர்கள் புவியில் தோன்றி மறைந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் மானிடம் அன்று முதல் இன்றுவரை அழியவில்லை. ஆனால் பண்புகள கலாசாரங்கள் மறைந்தும் மறையாமலும், தோனறியும் தோன்றாமலும், தேய்ந்தும் வளர்ந்தும் வளர்பிறை நிலவாகிப் பின் தேய்பிறையாகிப் பின் முற்றாக மறைந்து பின் வளர்வது போன்று உலகை உலுக்கிக் கொண்டிருக்கிறது. அதுபோன்றதே மனித மனப்பாங்கும். இம் மனப்பாங்கில் மாற்றமேற்படாவிட்டால் பழையன பழையனவாக இருக்கப் புதியனவற்றிற்கு இடமில்லாது போய்விடும். இதனால அறிவு வளர்ச்சிக்கும் விஞ்ஞான வளர்ச்சிக்கும் இடமில்லாது போய்விடும். விஞ்ஞானம் உள்ளதை உள்ளதாக வைத்திருப்பதில்லை. மாறாக அதிலிருந்து வேறொரு விந்தையைத் தோற்றுவிக்க முயலும் என்பதற்குப் பல உதாரணங்களைக் கூறலாம். அவற்றில் ஒன்றாக மணிக்கூட்டைக் கூறலாம். இவ்வாறாக மாற்றங்கள் ஏற்பட வேண்டுமேயானால் எம்மிடையே காணப்படுகின்ற சார்பு நிலைப்பட்ட மனப்பாங்கு நம்மிடமிருந்தும் நீக்கப்படவேண்டும். அப்போதுதான் வித்தியாசமான சிந்தனைகள் நம்மிடையே உருவாக முடியும். அச்சிந்தனைகள் சமுதாயத்தில் ஏதோவொரு வகையில் மாற்றத்தை ஏற்படுத்தும். பதிய கண்டுபிடிப்புகள் இச்செயற்பாட்டை மேலும் வலுவடையச் செய்யும். புதிய உத்வேகத்தை தோற்றுவிக்கும் என்பதை விளக்க ஒரு கதை.

சுவிஸ் நாட்டில் இரண்டு சிறுவர்கள் கூட்டாகத் தமது அறிவு வளர்ச்சியின் பயனாக புதிய வகையான மணிக்கூடு ஒன்றைக் கண்டுபிடித்தனர். ஆனால் அதற்கான ஒரு நிறுவனத்தை நிறுவ பொருளாதார பலம் அவர்களிடம் இருக்கவில்லை. எனவே அந்நாட்டிலுள்ள பிரபல்யமான உலகப் புகழ்பெற்ற மணிக கூட்டுத் தயாரிப்பு நிறுவனம் ஒன்றிற்குச் சென்றார்கள். இயக்குநரைச் சந்தித்து தமது கண்டுபிடிப்பைப் பற்றி அளவளாவினார்கள். இதைக் கேட்ட நிறுவன இயக்குநர் புன்சிரிப்புடன் "நான் உங்களை மூன்று கேள்வி கேட்கிறேன் சரியாகப் பதில் சொன்னால் உங்கள் அறிவுக்கூர்மையை மெச்சி நல்லதோர் முடிவுக்கு வருகிறேன்" என்றார்.

முதலாவது கேள்வி "மணிக்கூட்டில் நேரக் குறிப்புகள் எங்கே இருக்கவேண்டும்? " என்றார். சிறுவர்களோ " அப்படியொரு குறிப்புத் தேவையில்லை" என்றாகள். இரண்டாவது கேள்வி "மணிக்கூட்டின் சுரை எங்கே இருக்கவேண்டும்? " "எமது மணிக்கூட்டுக்கு சுரை தேவையில்லை" என்றார்கள் சிறுவர்கள். சின்னக் கம்பி பெரிய கம்பியை எங்கே பொருதியுள்ளீர்கள். எமது கண்டுபிடிப்பில் அப்படியான கம்பிகள் இல்லையே என்றார்கள். இயக்குநரோ பைத்தியங்களே போய்வாருங்கள் என்றார். விரக்தியுடன்சென்ற சிறுவர்கள் செல்வந்தர் ஒருவர் உதவியுடன் புதிதாக மணிக்கூட்டு நிறுவனம் ஒன்றை ஆரம்பித்தார்கள். அதுவே இலக்ரோனிக் (Electornic) மணிக்கூடு. இம்மணிக்கூட்டின் வருகை சுரை மணிக்கூட்டின் பயன்பாட்டை குறைவடையச் செய்தது. ஒன்று தேய்பிறையாக மற்றொன்று வளர்பிறையாகும்.

எனவே, காலவோட்டத்துக்கு ஏற்ப சார்பு நிலைபட்ட மனப்பாங்கு நம்மிடம் இருந்து களையப்பட வேண்டும். அப்போதே உலகில் புதிய சிந்தனைகளுடன் கூடிய புதுயுகம் பிறக்கும்.

*மு.விக்னேஸ்வரன்*

# ஜப்பானியக் குழுவினர் கிளி. வைத்தியசாலையில்

(தனங்கிளப்பு)

ஜப்பானிய உயர்மட்டக் குழுவொன்று கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு விஜயம் மேற்கொண்டு வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்திப் பணிகளை பார்வையிட்டனர்.

இக்குழுவினரை கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் சத்தியமூர்த்தி, கிளிநொச்சி மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் ரத்தினம் சிவானந்தன் ஆகியோர் வரவேற்று வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்திப் பணிகள் குறித்து எடுத்துரைத்தனர்.

1996இல் இடம்பெற்ற "சத்ஜெய" இராணுவ நடவடிக்கை காரணமாக இவ்வைத்தியசாலை முற்றாகச் சேதமடைந்த நிலையில் தற்காலிக தகரக் கொட்டகைகளின் கீழும், மர நிழல்களிலுமே இயங்கிவருகிறது.

ஜப்பானிய நிதி உதவியுடன் சிகிச்சைப் பிரிவின் கட்டடம் ஒன்று இங்கு நிர்மாணிக்கப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. (யே-37)

# தேர்தலை எதிர்கொள்ளும் வகையில் கட்சியைப் பலப்படுத்த வேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் ஆலோசனை

(கொழும்பு)

எதிர்காலத்தில் நடைபெறும் எந்தவொரு தேர்தலிற்கும் முகம் கொடுக்கும் வகையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பலப்படுத்த வேண்டும என எதிர்க்கடசித் தலைவா மகிந்தராஜபக்ஷ ஆலோசனை கூறியுள்ளாா.



தொழிற் சங்கப்பிரதிநிதிகளை கடந்த வியாழக்கிழமை சந்தித்துப் பேசிய போதே மகிந்த ராஜபக்ஷ இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து இதுபற்றி பேசுகையில், கட்சி குறித்து எத்தகைய கருத்துக்கள் நிலவிய போதும் மக்களுக்கு நன்மைபயக்கக் கூடிய வகையில் தீர்மானங்களை எடுக்கக் கூடியவர் என்ற பெருமை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கே உரியது இதனால் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஜே.வி.பி. கூட்டுப் பற்றி எவரும் அச்சம் கொள்ளத் தேவையில்லை.

ஜே.வி.பி -ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடன் இணைந்து செயற்படுகின்ற போதும், நாடு முழுவதிலும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் நடவடிக்கை பரவலாக்க வேண்டியிருக்கின்றது.

இதேவேளை,ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடன் தொடர்புடை தொழிற்சங்கங்களின் செயற்பாடுகள் செயலிழந்து போவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. அத்தொழிற்சங்கங்களின் நலன்களைப் பாதிக்கும் வகையிலான அரசின் செயற்பாடுகளுக்கு எதிராக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி குரல் கொடுக்கும் என்றும் அவர் உறுதியளித்தார்.

(தி-60,10)

# வேறுபாடுகளை மறந்தால் என்றும் தமிழ் வாழும்

## இராமலிங்கம் அடிகளார் உரை

(பருத்தித்துறை)

"உயிர்களுக்குத் துன்பம் செய்யக்கூடாது என்பதை விளக்குவதே தவமாகும். யார் அடித்தாலும் அடியை வாங்கிக்கொண்டு பொறுத்திருப்பதும், கடுஞ் சொல்லையும் சகித்துக் கொண்டிருப்பதும் தான் வீரமாகும்! இவ்வீரத்தையும் தொண்டர்களின் தொண்டு உள்ளத்தையும் பெருமையாகப்பேசுவதே பெரியபுராணத்தின் குறிக்கோளாக இருக்கிறது" இவ்வாறு வடமராட்சி கம்பன் கழகத்தின் சேக்கிழார் விழாவிலே உரையாற்றிய தமிழ்நாடு பேராசிரியர் அரங்க இராமலிங்கம் குறிப்பிட்டார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர்;

தமிழ் மொழியையும் தமிழ் மரபையும் நாம் மீட்டெடுக்கவேண்டும். இனம், மரபு, பண்பாடு, சைவபக்தி ஆகியவற்றை மீட்பதை எமது கடமையாக ஏற்றுக்கொள்ளவேண்டும். அந்தக் கடமைகளுக்கு அமைப்பும் தலைமையும் முக்கியம். இதற்கு நம்மை இழக்க வேண்டும்.

தேவாரத் திருமுறைகளை அருளிய அப்பரும் சம்பந்தரும் சந்தித்தபோது, தமிழ்மொழி, தமிழ் மரபு, தமிழ்ப் பண்பாடு, சைவம் என்பனவற்றை வளர்க்கும் அமைப்பு முறையினை திருஞானசம்பந்தரிடம் இருந்து திருநாவுக்கரசர் அறிந்துகொண்டார்.

தமிழையும் சைவத்தையும் வளர்க்கும் அமைப்புக்கும் அதன் தலைமைக்கும் நம்மையே இழக்கத் தயாராக இருக்கவேண்டும் எனத் திருநாவுக்கரசர் கூறியுள்ளார். ஆனால் தமிழ் நாட்டில் நடப்பதென்ன? அமைப்பையும் தலைமையையும் மதிக்காத தலைவர்கள்தான் பெருகியுள்ளனர். அவர்கள் ஆளுக்கொரு கட்சியாகப் பிரிந்து நிற்கிறார்கள். இந்நிலை நல்லதல்ல.

கி.பி.மூன்றாம் நூற்றாண்டு தொடக்ச 12ஆம் நூற்றாண்டுவரை தமிழ்நாடு இரு[illegible] நிலையை வரலாறுகள் எடுத்துக்கூறுவதுதான பெரியபுராணம். பெரியபுராணத்தில் தெரிவிக்கப்பட்ட தகவல்கள் அனைத்தும் தமிழ்நாட்டின் வரலாறு.

பெரியபுராணத்தில் கூறியதாவது; அக்காலத்தில் பாடல்பெற்ற தலங்கள் இருந்தது போல் இன்றில்லை. அவை காலத்திற்கேற்ற வளர்ச்சிகளைத் தற்போது கண்டுள்ளன.

தொண்டர்கள் அடியார்களின் பெருமை பேசும இந்நூல் அக்காலத்திலேற்பட்ட சமூகப் புரட்சி பற்றியும் கூறுகின்றது. தகுதி, ஒழுக்கம், நேர்மை, உழைப்பு, அன்பு, ஒற்றுமை ஆகியன இருந்தால் இறைவனை அடைந்து சிவகதி பெறலாம். இத்தகைய அம்சங்களை அடைய மக்கள் வேறுபாடுகளை மறந்து ஒன்றுபட வேண்டும். இவ் ஒற்றுமை மூலம்தான் நாடு வாழும், தமிழ் வாழும், இறையருள் கிடைக்கும் என்றார்.

யாழ்.பல்கலைக்கழகப் பேராசிரியர் ஏ. சண்முகதாஸ் தலைமை உரையில் குறிப்பிட்டதாவது,

கம்பராமாயணத்தில் போர்வீரமும், சேக்ழாரின் பெரியபுராணத்தின் ஞானவீரமும் உண[illegible] பக்திக் கலை இரண்டிலும் உண்டு. ஆனால் சேக்கிழாரின் பெரியபுராணம் பக்திச் சுவைக்குச் சென்றுவிடுகிறது. கம்பராமாயணம் வடமொழியில் இருந்து தமிழ் நாட்டுக்கு வந்தது. பெரியபுராணத்தில் வரும் நாயன் மார்கள் தொண்டர்களில் அதிகமானோர் சோழ நாட்டையே சேர்ந்தவர்கள். நால்வர் மாத்திரமே பாண்டிய நாட்டைச் சேர்ந்தவர்கள். பெரிய புராணத்தை இன்னும் புதிது புதிதாகப் பார்க்க வேண்டும். இதில் உள்ள இலக்கிய சுவையும் தொண்டர்களின் வரலாற்றையும் அறிந்து கொள்ளவும் இவ்விழா வழி வகுத்துள்ளது என்றார்.

(சி-52)

## இராசிபலன்

**08.02.2004**

**(தை 25, ஞாயிற்றுக் கிழமை)**

| | |
|---|---|
| துதியை | பிற்பகல் 03.09 மணி வரை |
| பூரம் | பின்னிரவு 4.52 மணி வரை |
| இராகுகாலம் | 05.05-06.35 மணிவரை |
| சுபநேரம் | 09.35-11.05 மணிவரை |
| | சித்தாமிர்தம் |

**மேடம்**
சிறுவியாதி, மனப் பதற்றம், நிலை மாற்றம், முயற்சி தாமதம்.

**இடபம்**
கல்வியில் ஆர்வம், உடல் நலக் குறைவு, காரிய தாமதம்,அதிக வார்த்தை.

**மிதுனம**
பிரயாண நன்மை, எடுத்த காரியம் கைகூடும், தேக நலன், போசன நன்மை.

**கடகம்**
புத்திசாதுரியம், அப கீர்த்தி, குடும்ப சுகம், முயற்சி தாமதம்.

**சிங்கம**
தெய்வ சிந்தை, எதிர்பாராத நன்மை, மேன்மை, காரிய சித்தி.

**கன்னி**
அமைதிக் குறைவு, சுப செலவு, பிரயாணம், எடுத்த காரியம் தாமதமாகும்.

**துலாம்**
தடைப்பட்ட காரியம் கைகூடும், தன இலாபம், தொழில் சிந்தை, பெரியோர் உதவி.

**விருச்சிகம்**
புத்திசாதுரியம், பிறர் ஒத்துழைப்பு, தொழிலில் ஆர்வம், தெய்வ நம்பிக்கை.

**தனுசு**
கட்டுப்பாடு,இடமாற்றம், பிதாவழி உறவு, முயற்சி தாமதம்.

**மகரம்**
வீண் பிரச்சினை, பிரயாண தடங்கல், காரிய தாமதம், உஷ்ணவியாதி.

**கும்பம்**
முயற்சி கைகூடும், பிரயாணம், குதூகலம, போசன நன்மை.

**மீனம்**
தேக ஆரோக்கியம், காரிய அனுகூலம், நண்பர்கள் சந்திப்பு, தொழில் விருத்தி.
(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)
- வளவன்.

# உரங்களின் விலையை குறைக்க கோரி மூதாட்டி உட்பட 13 பேர் உண்ணாவிரதம்

(கொழும்பு)

உரங்களின் விலைகளைக் குறைக்குமாறு கோரி தென்பகுதியைச் சேர்ந்த மூதாட்டி உட்பட 13 விவசாயிகள் நேற்றுமுன்தினம் முதல் கொழும்பு புகையிரத நிலையம் முன்பாக சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அரசாங்கத்தினால் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வரும் மானியத்தின் தொகையை அதிகரிக்கவேண்டும், உரங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள அதிகரித்த வற்வரி நீக்கப்படவேண்டும், 50 கிலோக்கிராமையுள்ள யூரியா பை ஒன்றிற்கு அதிகரிப்புச் செய்யபபட்டுள்ள விலையை ஆகக் குறைந்தது 500 ரூபாவாகக் குறைக்க வேண்டும் மற்றும் யூரியா தவிர்ந்த ஏனைய உரங்களின் விலைகளையும் குறைக்க வேண்டும் என்ற முக்கிய 4 கோரிக்கைளை முன்வைத்தே விவசாயிகள் சாகும்வரையான இவ் உண்ணாவிரதப் போராட்டதில் ஈடுபட்டுள்ளனர்.

இப போராட்டத்தில் ஈடுபட்டுள்ள 65 வயதுடைய மூதாட்டியிடம் இதுபற்றிக்கேட்டபோது, இதுவரை காலமும் வீட்டிற்குள் பட்டினி இருந்து வந்தோம். இன்று வீதியில் இருக்கின்றோம் எனக் குறிப்பிட்டார்.

இதேவேளை, தமது மேற்படி பிரச்சினைகள் குறித்து உரிய நடவடிக்கைகள் எடுக்கும் வகையில் நிதியமைச்சர் கே. என.சொக்ஸி, பிரதிநிதியமைச்சர் பந்துலகுணவர்த்தன மற்றும் திறைசேரியின் செயலாளர் ஆகியோர் தம்முடன் பேச்சுவார்த்தை ஒன்றை நடத்த முன்வர வேண்டுமெனவும அதுவரை காலமும் தாம் சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடப்போவதாகவும் அவ் விவசாயிகள் அறிவித்துள்ளனர். (இ-18)





# வீதி அபிவிருத்தி அதிகாரசபை மக்களுக்கு வேண்டு கோள்

(யாழ்ப்பாணம்)

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடனான "கார்ப்" என்ற திட்டத்தின் கீழ் கண்டி-யாழ்ப்பாணம் வீதியின் மிருசுவில் தொடக்கம் யாழ்ப்பாணம் வரையான பகுதி (290வது கி.மீ. தொடக்கம் 320 வது கி.மீ வரை) இந்த ஆண்டுபுனர்நிர்மாணம் செய்யப்படவுள்ளது.

இதன் பொருட்டுவீதி விஸ்தரிப்பு வேலைகளும் இடம்பெறவுள்ள தால் இவ் வீதியின் மருங்கே, வீதியின் மத்தியில் இருந்து ஒவ்வொரு புறமும் பதினைந்து மீற்றர் தூரத்திறகுள் மதில்கள் உட்பட எதுவித நிர்மாண வேலைகளும் வலுவான காரணங்களின்றி அனுமதிக்கப்பட மாட்டாது என்பதை வீதி அபிவிருத்தி அதிகார சபை பொதுமக்களுக்கு அறிவக்கிறது. (யே)

# பாடசாலைகளின் தேவைகளை சமூகம் நிறைவேற்ற வேண்டும்

## சிவாஜிலிங்கம் எம்.பி. உரை

(கோப்பாய்)

உயர் பாதுகாப்பு வலயத்தின் எல்லைப் புறங்களில் அமைந்துள்ள பாடசாலைகள் யாழ். குடாநாட்டில் பல்வேறு துனபங்களையும் துயரங்களையும் சுமந்து செயற்பட்டு வருகின்றமை கவலைக்குரியதே. எனவே அவற்றின் இத்தகைய நடவடிக்கைகளைப் போக்கி இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்த பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட்டாக குரல் கொடுத்து வருகின்றமை தெரிந்ததே. இவர்களுடன் இணைந்து பாரிய அழுத்தங்களைக் கொடுக்க பாடசாலை சமூகம் பின் நிற்கக் கூடாது.

இவ்வாறு யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கம் அச்செழு சைவப்பிரகாச வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போது தெரிவித்துள்ளார்.

பாடசாலை அதிபர் சி. இராசசேகரம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தொடர்ந்து பேசிய அவர்,

பாடசாலையின் தேவைகள் சமூகத்தின் தேவைகள் ஆகியவற்றை நிறைவு செய்ய வேண்டிய பொறுப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுக்குரியதே ஆயினும் சிலவற்றை நிறைவு செய்ய அரசினால் ஒதுக்கப்படும் நிதி போதுமானதாக இல்லை.

யாழ்.மாவட்டமும் கிளிநொச்சி மாவட்டமும் தனித்தனியாகப் பிரிக்கப்பட்ட போதும் தேர்தல் மாவட்டத்தில் ஒன்றாகவே உள்ளன. எனவே பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்படும் ஐம்பது இலட்சம் ரூபா நிதி இவ்விரு மாவட்டத்தின் தேவைகளையும் பூர்த்திசெய்ய வேண்டிய நிலை உள்ளது என்றார். (தி-79)

# அபிவிருத்தி வளர்ச்சிக்கு ஏற்ப ஆளுமை விருத்தி அவசியம்

## மாகாண சபையின் செயலாளர் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் அபிவிருத்தித் திட்டங்கள் நல்ல முறையில் மேற்கொள்ளப்பட வேணடுமாயின் தனியார் துறைக்கும், அரச இயந்திரத்துக்குமிடையில் நல்ல புரிந்துணர்வு ஏற்பட வேண்டும். இன்றைய பூகோள மயமாக்கல் கொள்கையின் கீழ் அபிவிருத்தித் திட்டங்களின் பரிமாணங்களிலும் கேள்விப் பத்திரத் தெரிவு முறையிலும் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இந்த மாற்றங்களுக்கு ஈடுகொடுக்கக்கூடிய வகையில் வடக்கு கிழக்கு மாகாண கட்டட ஒப்பந்தகாரர்களின் ஆளுமைகள் விருத்தி செய்யப்பட வேண்டும்.

வடக்கு-கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளரான எஸ். ரங்கராஜன் யாழ்ப்பாணம் கைத்தொழில் வணிகர் மன்றக் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் ஆரமபிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மாகாண கட்டட ஒப்பந்தகாரர்களுக்கான ஆளுமை விருத்திச் செயலமர்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுமபோது தெரிவித்தார்.

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் பணியாளர் மூர்த்தியின் நெறிப்படுத்தலில் நடைபெற்ற இச்செயலமர்வின்போது ஜீ.ரி.சற். நிறுவனத்தின் ஆலோசகர் வாட் டர் செலர், நிக்கொட நிறுவனத்தின் திட்டப் பணிப்பாளர் ரீ.லங்கா நேசன், இக்ராட் நிறுவனத்தின் பொறியியலாளா சிவசுப்பிரமணியம் உட்பட பல பொறியியலாளர்கள் பங்கு கொண்டிருந்தனர்.

பிரதம செயலாளர் எஸ்.ரங்கராஜன் அங்கு தொடர்ந்து பேசும் போது,

மூடபபட்ட பொருளாதாரத்தில் யுத்தம் ஆரம்பித்து, திறந்த பொருளாதாரத்தில் யத்தம் முடிவடைந்துள்ளது. 20 வருட கால யுத்தம் எமககுச் சார்பாக இருக்கவில்லை. புதிய பொருளாதாரத் திட்டப்படி நாட்டின அபவிருத்திப் பணிகளுக்கு அரசு பொறுப்பில்லை. தனியார்துறை தான் பொறுப்பாகும். இந்த நிலையில் தனியார் துறையின ஆளுமையை விருத்தி செய்ய வேண்டிய கட்டாயம் எமக்கு ஏற்பட்டுள்ளது.

அபிவிருத்தித் திட்டங்களுக்கான ஒப்பந்தங்கள் இப்போது புதிய கருத்துப்படி வருகின்றன. கேள்விப் பத்திரமுறையும் புதுமையாகவுள்ளது. கேள்விப்பத்திரத்தில் ஆகக் குறைந்த கேள்வியைக் கேட்ப வருக்குத்தான் ஒப்பந்தம்- கொடுக் கவேண்டும் என்ற கட்டாயம் இப்போது இல்லை. இந்த நிலைப் பாட்டினை எமது அரச அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் கூட இன்னமும் புரிந்து கொள்ளவில்லை.

மேலும் ஒப்பந்தக்காரர்கள் தனித்து நின்று எதனையும் சாதித்து விடப் போவதில்லை. தனியார் ஒப்பந்தக் காரர்கள் யாவரும் ஒன்றிணைந்து நிறுவனமயப்பட வேண்டும். வடக்கு கிழககில் அபிவிருத்திட்டங்கள் இடம் பெறவேண்டுமாயின் தனியாா துறை பலப்படுத்தப்பட வேண்டும். அந்த வகையில் தான் இந்த செய லமர்வு முதல் தடவையாக யாழ்ப்பாணத்தில் அதுவும் தமிழ் மொழி யில் நடத்தப்படுகின்றது.

இந்தச் செயலமர்வின் பின்னர் இங்குள்ள கட்டடஒப்பந்தக்காரர்கள் மத்தியல் நடத்தையில் மாற்றம் தென்பட வேண்டும். அவ்வகையில் ஒப்பந்தக்காரர் சமூகம் ஒன்று உரு வாக்கப்பட வேண்டும். நாம் இனி எமது வரலாற்றில் புதிய மிக முக்கிய அடியை எடுத்து வைக்க வேண்டும். பழைமைக்கு விடுதலை கொடுத்து புதுமையான மாற்றத்தினை நாம் முகம் கொடுக்க வேண்டும் எனக் குறிப்பிட்டார். (து-16)

# சமாதான முயற்சிகளில் நோர்வேயின் பங்களிப்பு தொடரும்

## எரிக் சொல்ஹெய்ம் உறுதி

(கொழும்பு)

இலங்கையில் சமாதானத்தை நிலைநாட்டுவதற்கு நோர்வே தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயற்படும் எனவும், அதில் எந்த வித சந்தேகமும் கொள்ளத் தேவையில்லையெனவும் நோர்வேயன் சமாதானத்தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து தொடர்ந்து பேசிய அவர்,

சமாதான செயற்பாடுகளில் இருந்து நோர்வே வெளியேறி விட்டதாக்க் கூறப்படும் செய்திகள் யாவும் முற்றிலும் உண்மைக்குப் புறம்பானவையாகும்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கடந்த நவம்பர் மாதம் 4ஆம் திகதி அரசின்கீழ் இருந்த 3முக்கிய அமைச்சுக்களை பொறுப்பேற்றிருந்தமையைக் காரணம் காட்டிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தன்னால் சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல முடியாது என தெரிவித்திருந்தார்.

இதனால் சமாதானச் செயற்பாடுகளில் இருந்து தற்காலிகமாக நோர்வே விலகிக்கொண் டது.

இந் நிலையில் தற்போது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மீண்டும் சமாதானப் பேச்சுவாாத்தைகளை ஆரம்பிக்குமாறு பிரதமரைக் கோரிவருவதுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு தடையாகவுள்ள விடயங்கள் குறித்து பிரதமருடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகின்றார்.

அத்துடன் சமாதானப்பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிப்பது குறித்து நாம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் ஆகியோருடன் அடிக்கடி தொடர்பு கொண்டு பேசி வருகின்றோம்.

எனவே இலங்கையில் சமாதானத்தை நிலை நாட்டும் விடயத்தில் நோர்வே கொண்டுள்ள அர்ப்பணிப்புத்தன்மை எள்ளளவும் குறையவில்லை மாறாக அது மேலும் பலமடைந்துள்ளது.

இலங்கையில் சமாதான அரசியல் தீர்வு ஒன்று தேவை என்பதில் சம்பந்தப்பட்ட சகல தரப்பினரும் மிகுந்த அக்கறையுடன் இருப்பதால் தமது பங்களிப்பு மேலும் வலுவடைந்துள்ளது.

யுத்த நிறுத்த உடன்படிக்கையுடன் நேரடியாக சம்பந்தப்பட்ட இரு தரப்பினரும் அதனை அர்ப்பணிப்புடன் கடைப்பிடித்து வருதால் இலங்கை யுத்த நிறுத்த கண்காணபபுக்குழுவுக்கு தமது பணிகளை திறமையாக ஆற்றுவதற்கான வாயப்புக்கள் இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (து-61,10)

## பொதுக் கூட்டம்

கொழும்புத்துறை மேற்குஜெற்வைன்ஸ் சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.மணிக்கு சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ச-51)

# தமிழக முகாம்களிலுள்ள 7000 சிறுவர்களுக்கு இலங்கை குடியுரிமை

(சென்னை)

தமிழகம் அகதிமுகாம்களில பிறந்த 7 ஆயிரம் ஈழத் தமிழர்களுக்கு இலங்கைக் குடியுரிமை வழங்கப்படவுள்ளது.

தமிழகம் அகதிமுகாம் உட்பட இந்தியாவின் பல பாகங்களில் சுமார் 63 ஆயிரம் இலங்கைத் தமிழர்கள் வாழ்ந்து வருகின்றனர். இதன்முதல் கட்டமாக கமிம நாடு மர்நும் இாாமேஸ்வரம் முகாம்களில் உள்ள சுமார் 500 சிறுவர்களுக்கு இலங்கைக் குடியுரிமை வழங்கப்படவுள்ளதாக இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் சுமித் நாணயக்கார தெரிவித்துள்ளார். சிறுவர்களுக்கு இலங்கை குடியுரிமை வழங்கும் இப்பணி வெகு விரைவில் ஏனைய முகாம்களுக்கும் விஸ்தரிக்கப்படவுள்ளதாக அவர் மேலம்கெரிவிக்கார். (கி-60)

# சோனியா பற்றிய ஜெயலலிதாவின் குற்றச்சாட்டுக்கு கருணாநிதி எதிர்ப்பு

(சென்னை)
இந்தியாவில் பிறந்த ஒருவர் தான் பிரதமராக வரவேண்டும் என்று தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா கருத்துத் தெரிவித்ததாகக் கூறப்படுவதை தி.மு.க. தலைவர் கருணாநிதி குறைகூறி இருக்கிறார்.


ஜெமினி சர்க்கஸில் உடலை வில்லாய் வளைத்து சாகசம் செய்யும் சிறுமி.

சென்னையில் வெளியிட்ட ஓர் அறிக்கையில் 1999ஆம் ஆண்டு வாஜ்பேய் அரசைக் கவிழ்ப்பதற்காக சோனியா காந்தியை ஜெயலலிதா சந்தித்தபோது அவர் வெளிநாட்டவர் என்பது தெரியவில்லையா என அவர் கேள்வி எழுப்பினார்.

காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி பிரதமராகவரத்தடையேதும் இல்லை என்றும், எந்தச் சட்டமும் குறுக்கே நிற்காது என்றும் பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ் கூறியிருக்கின்றார்.

திண்டிவனம் அருகே கைலாபுரத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இந்தியர் ஒருவரை மணந்த பிறகு சோனியாகாந்தி இந்தியர் ஆகிவிட்டார் என்றும், அவர் வெளிநாட்டார் என்று பிரசாரம் செய்வது மக்கள் மத்தியில் எடுபடாது என்றும் அவர் கூறினார்.

எந்தக் கருத்தை வைத்தீு இந்தக் கோஷத்தை எழுப்புகின்றார்களோ அந்தக் காங்கிரஷ் தலைவி சோனியா காந்தி பிறந்தது வெளிநாடு என்றாலும் அவர் வாழ்ந்ததும், வாழ்ந்துகொண்டிருப்பதும் இனி வாழப்போவதும் இந்தியாவில் தான் என்று அவர் மேலும் கூறினார். (து)

# சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றத் தீர்ப்பை உயர்நீதிமன்றம் ரத்துச் செய்தது

(சென்னை)
வருமானத்திற்கு அதிகமாகச் சொத்துச் சேர்த்த வழக்கில் இருந்து ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி ஞானேஸ்வரன், மற்றும் இருவரை சி.பி.ஐ.சிறப்பு நீதிமன்றம் விடுவித்தது செல்லாது என்று சென்னை உயர்நீதிமன்றம் நேற்று தீர்ப்பு வழங்கியது.

தமிழ்நாடு கனிமவள நிறுவனத்தின் தலைவராக இருந்த காலத்தில் ஞானேஸ்வரன் வருமானத்திற்கு அதிகமாக சொத்துச் சேர்த்ததாக சி.பி.ஐ., கொடுத்த வழக்கில் இருந்து தங்களை விடுவிக்க வேண்டும் என்று ஞானேஸ்வரனும் மற்றும் இருவரும் கோரியதை ஏற்று சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றம் சென்ற ஆண்டு ஜனவரி மாதம் அவர்களை விடுவித்தது.

இந்தத் தீர்ப்பை எதிர்த்து சி.பி.ஐ. சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல்செய்த மேன்முறையீட்டு மனுவை விசாரித்த நீதிபதி அசோக்குமார் சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றத்தின் தீர்ப்பை ரத்துச் செய்து நேற்று தீர்ப்பளித்தார்.

எதிர்வரும் 22ஆம் திகதி முதல் ஞானேஸ்வரனும் மற்றவர்களும் வழக்கைத் தொடர்ந்து சந்திக்க வேண்டும் என்று நீதிபதி உத்தரவிட்டார். (து)


தைப்பூசம் திருநாளையொட்டி சிங்கப்பூரில் புதன்கிழமை காவடி எடுத்த தமிழ்ச் சிறுவன். காவடி எடுக்கும் தமிழர் பண்பாடு அக்கரைச் சீமையிலும் ஆண்டாண்டுகளாய்த் தொடர்கிறது.

# அமைச்சின் பேச்சுக்கு ஆட்சேபம் தி.மு.க., பா.ம.க. உறுப்பினர் வெளிநடப்பு

(சென்னை)
தமிழக சட்டப்பேரவையில் இருந்து தி.மு.க., பா:ம.க. சட்டமன்ற உறுப்பினர்கள் நேற்று முன்தினம் வெளிநடப்புச் செய்தனர்.

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது 2ஆவது நாளாக நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய தி.மு.க. உறுப்பினர் பிச்சாண்டி பொடாச் சட்டம் தமிழ்நாட்டில் தவறாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதாகக் குற்றம் சாட்டினார்.


அப்போது குறுக்கிட்டுப் பேசிய மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தளலாய் சுந்தரம் மக்களவையில் வைகோதான் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர் எனப் பேசியிருந்ததை நாடாளுமன்றக் குறிப்பில் இருந்து சுட்டிக் காட்டினார்.

அமைச்சரின் இந்தக் கருத்துகளுக்கும் தி.மு.க. உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். இதையடுத்துச் சபையில் சிறிது நேரம் கூச்சல், குழப்பம் நிலவியது.

அமைச்சரின் கருத்தை அனுமதிப்பது வைகோவுக்கு எதிராக தற்போது நிலுவையில் உள்ள வழக்கைப் பாதிக்கும் என்று எதிர்க்கட்சித் தலைவர் க.அன்பழகன் கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவரின் இந்த ஆட்சேபத்தை பேரவைத் தலைவர் ஏற்கவில்லை. இதையடுத்து தி.மு.க., பா.ம.க. உறுப்பினர்கள் பேரவையில் இருந்து வெளிநடப்புச் செய்தனர்.

நாடாளுமன்றத்திலே பொடாச் சட்டம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னர் வைகோ பேசியதை இங்கே விவாதிப்பது சட்டத்திற்கு விரோதமானது. உள்நோக்கம் கொண்டது. இதனைச் சட்டமன்றப் பதிவேட்டிலேயே பதிவுசெய்ய வேண்டும் என்று கோருவது வைகோவின் அரசியல் வாழ்வைக் கெடுக்கவேண்டும் என்ற உள்நோக்கம் கொண்டது என்றும் சட்டமன்ற மரபுகளை சபாநாயகரும் மீறுகிறார். அமைச்சரும் மீறுகிறார். இதைப் பாட்டாளி மக்கள் கட்சி கடுமையாகக் கண்டித்து வெளிநடப்புச் செய்கின்றது என்றும், பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய பா.ம.க. சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். (து)


இந்திய நாட்டின் பதின்மூன்றாவது மக்களவை கலைக்கப்படுவதற்கு முன்னர் எம்.பிக்கள், மற்றும் சோனியாகாந்தி உள்ளிட்டோர் ஜனாதிபதியுடன் எடுத்துக்கொண்ட படம்.

# ஈராக்கின் ஆட்சிப்பொறுப்பு ஒப்படைப்புத் தாமதமாகலாம்

(வாஷிங்டன்)
ஈராக்கின் ஆட்சிப் பொறுப்பை ஈராக்கியர்களிடம் ஒப்படைக்கும் நடவடிக்கை எதிர்பார்த்த தினத்தை விட சற்றுத் தாமதம் அடையும் என்று எதிர்பார்க்கப்படுவதாக அமெரிக்க உயர்அதிகாரிகள் கடந்த வியாழக்கிழமை அறிவித்துள்ளார்கள்.

ஈராக்கின் ஆட்சிப் பொறுப்பை ஈராக்கியர்களிடம் ஒப்படைக்கும் நடவடிக்கை தாமதம் அடைவது எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷுக்குச் சவாலாக அமையும் என்று அமெரிக்கப் பாதுகாப்புச் செயலாளர் ரொனால்ட் ரம்ஷ்வீல்ட் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இத்திட்டத்தில் மாற்றம் கொண்டுவரவேண்டும் என்று ஐக்கியநாடுகள் சபை ஆலோசனை முன்வைத்தால் அது பற்றி அமெரிக்கா பரிசீலனை செய்யும் என்று மற்றுமோர் உயர் அதிகாரி தெரிவித்துள்ளார்.(து-9)

# டெஸ்மா சட்டத்தை ரத்துச்செய்ய தமிழக அரச ஊழியர்கள் வழக்குத் தாக்கல்

(சென்னை)
அரசு ஊழியர்கள் வேலை நிறுதத்தில் ஈடுபடுவதைத் தடை செய்யும் டெஸ்மாச் சட்டத்தை இரத்துச் செய்யுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்குக்கு பதில் மனுத்தாக்கல் செய்யுமாறு தமிழக அரசுக்கு நோட்டீஸ் அனுப்ப மாநில நிர்வாக தீர்ப்பாயம் உத்தரவிட்டுள்ளது.

டெஸ்மாச் சட்டம் செல்லாது என்று அறிவிக்கக் கோரி சென்னை தலைமைச் செயலக ஊழியர் சங்கம் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை மாநில நிர்வாகத் தீர்ப்பாய நீதிபதி விசாரணைக்கு ஏற்றுக்கொண்டார்.

இதனிடையே டெஸ்மாச் சட்டத்தின் கீழ் பதவிநீக்கம் செய்யப்பட்ட தலைமைச் செயலக ஊழியர்கள் உட்பட மற்றும் பல துறைகளைச் சேர்ந்த 100 பேர் தங்களை மீண்டும் பணியில் அமர்த்துமாறு கோரி மாநில நிர்வாகத் தீர்ப்பாயத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளனர்.

மனுக்கள் மீதான விசாரணையை எதிர்வரும் 16ஆம் திகதிக்கு நீதிபதி ஒத்திவைத்தார்.

இதற்கிடையே டெஸ்மாச் சட்டத்தை எதிர்த்து தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தில் மாநிலத் தலைவர் ஸ்ரீதரன் சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல்செய்திருக்கிறார்.(து)

# முஸ்லிம் அரசியல் கட்சிகள் ஏன் கூட்டுச் சேர முடியாது?

## அஷ்ரப் காங்கிரஸின் தலைவர் கேள்வி

(கொழும்பு)

பேரினவாதக் கட்சிகள் தமது பலத்தை அதிகரிப்பதற்காக தற்போது ஒன்றிணைந்து வருகின்றன. அதேபோன்று சிறுபான்மை தமிழ்க் கட்சிகளும் தமிழ் மக்களின் உரிமைகளை பெற்றுக் கொள்வதற்காகவும் அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகவும் ஒன்றிணைந்துள்ளன.

இந் நிலையில் முஸ்லிம் கட்சிகள் மட்டும் ஏன் ஒன்றிணைந்து இயங்கத் தயங்குகின்றன என அஷ்ரப் காங்கிரஸ் தலைவர் எச்.சுபைதீன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினால் நடாத்தப்பட்டு வரும் "விடியும் வேளை" நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்; சிங்கள சமூகத்தின் பலத்தை மேலும் அதிகரிப்பதற்காக சிங்களப் பேரினவாதக் கட்சிகளான ஜே.வி.பி, மக்கள் ஐக்கிய முன்னணி, தேச விமுக்தி ஜனதாக் கட்சி, மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகியன கூட்டுச் சேர்ந்துள்ளன.

அதே போன்று வடக்குக் கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழ்க் கட்சிகள் தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில் கூட்டிணைந்து செயற்படுகின்றன.

இந் நிலையில் முஸ்லிம் கட்சிகள் மட்டும் ஏன் தனித்தனி கட்சிகளாக செயற்படுகின்றன எனப் பலர் மத்தியில் வினா எழுந்திருக்கின்றது. ஆனால் முஸ்லிம் கட்சிகளோ இதனை உணர்ந்து கொள்ளாது ஒவ்வொரு பாதையில் செல்கின்றன.

இதற்கிடையில் முஸ்லிம் காங்கிரஸின் ஐக்கியத்திற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ராவூப் ஹக்கிமே தடையாக இருக்கிறார் என்பதை முஸ்லிம் மக்கள் அனைவரும் நன்கறிவர்.

எனவே அமைச்சர் ஹக்கீம் தனது இந் நிலைப்பாட்டில் கடினப் போக்கை கடைப்பிடிப்பது நல்லதல்ல என கூறிவைப்பதுடன் முஸ்லிம்களின் நலன் கருதி அவரைச் செயற்படுமாறும் கேட்டுக் கொள்கின்றேன்.

அது மட்டுமல்ல தமது இனத்தையே கீழ்த்தரமான நிலைக்கு கொண்டுவரும் நடவடிக்கையில் அமைச்சர் ஹக்கீம் ஈடுபட்டுள்ளமையினையும் பலர் சுட்டிக் காட்டியுள்ளனர் என்பதையும் இங்கு கூறிவைக்க விரும்புகிறேன் என்றார். (தி-60,10)

# முறைசாராக் கல்விப் பயிற்சி பெப். 15ம் திகதி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மத்திய கல்லூரியின் யாழ்ப்பாண கல்வி திணைக்கள முறைசாரக் கல்விப் பிரிவால் நடாத்தப்படும் கணனிப் பயிற்சித் திட்டத்தின் கீழான கணனி, கணனித் தட்டெழுத்து, வீட்டு மின் இணைப்பு, வெளி இணைப்பு இயந்திர திருத்தம், வாகன சாரதிப் பயிற்சி, வெளிநாடு செல்பவருக்கான ஆங்கிலப் பயிற்சி ஆகிய ஆறு பாடநெறிகள் இம் மாதம் 15ம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளன.

தேசிய பாடசாலைகளின் முறைசார கல்விப் பயிற்சித் திட்டத்தின் கீழ் நடைபெறும் ஒவ்வொரு பயிற்சித் திட்டத்திற்கும் 50 மாணவர்கள் மட்டும் சேர்த்துக் கொள்ளப் படவுள்ளனர்.

பாடசாலையை விட்டு வெளியேறிய சகல வயதுப் பிரிவு ஆண், பெண் இரு பாலாரும் இதற்கு விண்ணப்பிக்க முடியும்.

இதற்கான விண்ணப்பப் படிவத்தினை இன்று தொடக்கம் கல்லூரி அலுவலகத்தில் பெற்று 10.02. 2004ற்கு முன்னர் விண்ணப்பிக் கவும். 16.02.2004 காலை 10.00 மணிக்கு பயிற்சி நெறி வகுப்புக்கள் ஆரம்பிக் கப்படவுள்ளன. யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த சகலரும் இப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக் கலாம். (யே)

## துண்டுப் பிரசுரம் விநியோகம்

(மட்டக்களப்பு)

"சட்டவிரோத மதுபான உற்பத்தியாளர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்" என குறிப்பிட்டு மட்டக்களப்பு மாவட்ட அரசியல் துறையினர் துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டு வருகின்றனர்.

சட்டவிரோத மதுபான உற்பத்தி மூலம் மக்கள் உயிரிழப்புக்கள், தீர்க்க முடியாத நோய்கள், கலாசார சீரழிவுகள் என்பன ஏற்பட்டு வருகின்றன.

இவற்றில் இருந்து மக்களை பாதுகாக்கும் பொருட்டு மட்டக்களப்பு மாவட்ட அரசியல் துறையினர் இந் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். (தி-4,63)

# இராணுவத்தினருக்கு மனித உரிமைப் பயிற்சி

(களுத்துறை)

இராணுவத்தினருக்கு மனிதவுரிமைகள் மற்றும் மனிதாபிமானம் பற்றிய பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட மனிதவுரிமை மீறல்கள் மற்றும் மனிதாபிமானமற்ற செயல்களிலும் இராணுவத்தினரே அதிகமாக ஈடுபட்டு வருவதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

இக் குறைபாட்டை நீக்கவே சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும் மனித உரிமை நிறுவனமும் இணைந்து இப் பயிற்சிகளை வழங்கவுள்ளன.

இப் பயிற்சிகள் எதிர்வரும் 9ம் திகதி முதல் தொடர்ந்து 12 நாட்களுக்கு நடைபெறுமென பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. (தி-60,4)

# இன்று வெள்ளிவிழாக்காணும் பட்டப்படிப்புக்கள் கல்லூரி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பட்டப்படிப்புக்கள் கல்லூரியின் 25வது அகவை நிறைவு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் கல்லூரியின் மெய்யியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் வே. யுகபாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் யாழ்.பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தரும் புவியியல் துறை பேராசிரியருமான பொ.பாலசுந்தரம்பிள்ளை, யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன், யாழ்.மாவட்ட அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் சி.செம்மணன் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகவும், யாழ் மக்கள் வங்கி முகாமையாளர் து.ரகு, இலங்கை வங்கி மேற்தரக் கிளை வாடிக்கையாளர் முகாமையாளர் எஸ்.சிவராமலிங்கம், யாழ். தேசியக் கல்வியியல் கல்லூரியின் உப பீடாதிபதி பா.தனபாலன், பேராதனைப் பல்கலைக் கழக அரசியல் விஞ்ஞானத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் வே. சிவயோகலிங்கம், யாழ். பல்கலைக் கழக தமிழ்த் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எஸ். சிவலிங்கராஜா மற்றும் யாழ்.பல்கலைக் கழக இந்து நாகரிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி மா. வேதநாதன், யாழ்.பல்கலைக் கழக வணிகத்துறைத் தலைவர் க.தேவராஜா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (தி-18)

## அமரர் ஜீ.ஜீயின் 27வது நினைவு தினம்

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஸ்தாபகத் தலைவர்களுள் ஒருவரான அமரர் ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் 27வது நினைவு தினம் நாளை காலை தமிழர் விடுதலைக் கூட்டணிக் காரியாலயத்தில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

முன்னாள் யாழ்.மாநகராட்சி மன்ற உறுப்பினர் செ.விஜயரட்ணம் தலைமையில் நடைபெறவுள்ள நினைவுதினக் கூட்டத்தில் கூட்டணித் தலைவரும் யாழ்.மாவட்ட எம்.பியுமான வீ.ஆனந்தசங்கரி உட்பட தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்களும் உரை நிகழ்த்துவார்கள். (வ)

சங்குநாதம்

சங்கரிக்கு வெற்றி
சம்பந்தனுக்கு தலைகுனிவு
விதுரன்

செய்த பழிக்கு தண்டனையாக
அமைந்த மிலேனியம் சிற்றி
வெற்றிவிடன்

வருகிறது தேர்தல்
கோவையூர் ஜெயன்

வாழ்வை வளம்படுத்த துரைமுருகர் எழுதும்
என் சோதிடம்

கே.வி.குணசேகரம் எழுதும்
கல்தூண்கள்
(தொடர்கதை)

வியாசரின் பதில்கள் | ஆலடி மாநாடு




சினிமாச் சிதறல்
மற்றும் பல அம்சங்களுடன் வாசிக்கத் தவறாதீர்கள்

வெள்ளி வைகறையில் உங்கள்
உள்ளங்களில் ஒலிப்பது

சங்குநாதம்

விலை ரூபா. 16.00

# தேசவழமை

வரலாற்றுத்துறைப் பேராசிரியர்
சி.பத்மநாதன்
பேராதனைப் பல்கலைக் கழகம்.

39

## தேசவழமை அதிகாரம் 1

## சுதந்திரங்களும் ஆதன உரிமையும்

### ஆதன வகைகள்

பிள்ளைகள் சிறுபிள்ளைகளாய் இருக்க பிதாவானவன் மறுதாரம் கலியாணம் முடிக்க வேணுமென்கில் அந்தப் பிள்ளைகளுடைய பேர்த்தி பேரன் முடுகின உறவுமுறையார் அந்தப் பிள்ளைகளை எடுத்துவளர்ப்பது பெரும்பாலும் வழக்கம். அப்போது அந்தப் பிதாவானவன் தன்னுடைய காலஞ்சென்றுபோன பெண்சாதி பெற்றுவந்த சீதனம் முழுவதையும் அந்தத் தாரத்துத் தேட்டத்திற் பாதியையும் தன் பிள்ளை அல்லது பிள்ளைகளோடே கூட அவர்களிடம் ஒப்பிக்கக் கடனாளியாய் இருக்கிறான். இந்தப் பிள்ளைகள் வளர்ந்து கலியாணம் முடிக்கத் தக்கவைகளான போது அந்தப் பிதாவாய் இருக்கப்பட்டவன் அந்தப் பிள்ளைகளை வளர்க்கப்பட்ட பேரன் பேர்த்தியிடமாகப் போய் அந்தப் பிள்ளைகளை கலியாணம் முடித்துக் கொடுக்கும்படிக்கு முன்னே சொல்லியபடி அவர்களிடத்தில் ஒப்பித்திருந்த மாதாவின் சீதனத்திலும் அந்தத் தேட்டத்திலும் தன்னுடைய சொந்த முதுசமான ஆதனத்திலும் சீதனம் கொடுப்பரீன்.

இந்தப்படியே கொடுத்த பிறகு இன்னமும் இந்த ஆதனங்களிலே சிலது பலது அந்தப் பிள்ளைகளை வளர்த்த பேரன் பேர்த்தி புறமாக மிஞ்சியிருந்ததானால் ஆண்பிள்ளை அல்லது ஆண்பிள்ளைகள் தாங்களாக நடப்பித்துக் கொள்ள வகைபோந்தவர்களானால் அந்த மிஞ்சின ஆதனங்களை எடுத்து பிரிவிடாமல் தாங்கள் கலியாணம் முடிக்கும் காலமளவும் பொதுவாக ஆண்டுவருவார்கள். அப்போது அந்த ஆதனங்களையும் அவைகளைக் கொண்டு அவர்கள் தேடிய தேட்டங்களையும் சரிவரப் பகிர்ந்துகொள்வார்கள். ஆனால் உடன் காலத்திலே பங்குபிரித்துப் புறம்பாக ஆண்டு வந்தார்களேயானால் அவரவர் தேட்டங்கள் அவரவருக்கே உடையவைகளாம். அண்ணன் தம்பிமார் ஒருவருக்கொருவர் பிரிவுகொடுக்கவேண்டியதில்லை.

ஆனால் அந்த மாதாவின் சீதனத்திலும் அந்நாளையிற் தோட்டத்தில் ஒன்றுபாதியிலும் ஒன்றும் மிஞ்சவில்லை என்று கண்டால் ஆண்பிள்ளைகள் இளந்தாரிகளானாலும் கலியாணம் முடித்திருக்கிறவர்களானாலும் தங்கள் பிதாவானவன் காலம் செல்லும் அளவும் தங்கள் சிறகு கொண்டு தானே பறக்கவேண்டியது. அதேனென்றால் இந்த முந்தின தாரத்தில் ஆண்பிள்ளைகள் தங்களுடைய இந்தப் பிதாவின் இடத்தில் யாதொன்றுங் கேட்டு வழக்குச் சொல்லவொண்ணாது.

இந்தப் பிதாவானவனுக்கு அவனுடைய இரண்டாம் தாரத்திலும் பிள்ளையல்லது பிள்ளைகள் உண்டானால், பெண்பிள்ளைகள் காரியமாக இன்னும் வகை காண்பிக்க வேண்டியதல்லவே. அதேனென்றால் அவர்கள் பிதாமாதாவுடனுமாகவிருந்து அப்பாற் படுகிற விதங்கள் பலமுறையும் பல பொழிப்புகளிலும் வேண்டிய மட்டுக்கு வகை காண்பித்திருக்கிறோம். இப்போது ஆண்பிள்ளைகள் காரியமாக வகை சொல்லுகிறோம். அந்த இரண்டாம் தாரத்திலும் ஆண்பிள்ளைகள் ஒன்றெனகிலும் அதிகமென்கிலும் இருக்குமிடத்தில், பிதாவானவன் காலம்சென்றுவிட்டால் அவனுடைய முதுசொம்மான ஆதனங்களை நேர் சரியாக இரண்டாய்ப் பிரித்து முந்தின தாரத்தில் ஆண்பிள்ளைகள் ஒரு பங்கும், பிந்தின தாரத்தில் ஆண்பிள்ளைகள் ஒரு பங்குமாக எடுத்துக் கொள் வார்கள். முந்தின தாரத்திற்கு ஒரு பிள்ளையானாலும் பிந்தின தாரத்திற்கு அஞ்சாறு பிள்ளைகளிருந்தாலும் சரி ஒன்று பாதிப்பிரிவுக்குள்ளாக நின்று விடவேண்டியது. இதுவல்லாமல் பிதாவின் கீழாக இருக்கப்பட்ட முந்தின தாரத்துத் தேட்டத்தில் ஒன்று பாதியும் பிசகில்லாமல் அந்த முந்தின தாரத்தில் ஆண்பிள்ளைகளுக்குடையது. அதில் யாதொரு பகுதி பிந்தினதாரத்தில் அழிவு சேதப்பட்டுப்போனால் முன் சொல்லியிருக்கிற பிரகாரம் அந்தத்தாரத்தில் ஆண்பிள்ளைகள் முந்தின தாரத்தில் ஆண்பிள்ளைகளுக்கு அந்தக்குறைவு சரிக்கட்டிக்கொடுக்கவேண்டும். இந்தப் பிந்தினதாரத்தில் ஆண்பிள்ளை அல்லது ஆண்பிள்ளைகள் அந்தப் பிந்தினதாரத்திற் தேட்டங்களையும் பெண் பிள்ளைகளுக்குச் சீதனம் கொடுத்தது நீக்கி மிஞ்சியிருக்கப்பட்ட ஆதனங்களையும் பங்கு பிரித்துக் கொள்வார்கள். அதுவும் முந்தவல்ல தாயானவள் செத்தபின்பு என்கிற தறியவும், இதுவல்லாமலும் ஆண்பிள்ளைகள் தங்கள் பிதாவும் மாதாவும் கலியாணம் முடித்திருந்த நாள்வரையில் பிதாவானவன் பட்ட கடனை இறுத்துக்கொடுக்கவும் கடனாளியாக இருக்கிறார்கள்.

### பிதாவும் மாதாவும் காலஞ்சென்றால் ஒரு தாரத்துப் பிள்ளைகளின் ஆதனப் பங்கீடு

12. பிதாவும் மாத்ாவும் ஒரு முறை கலியாணம் முடித்தவர்களாய் இருந்து பிள்ளைகளும் சிறுபராயமாயிருக்கிற காலத்திலே காலம் சென்று விட்டார்களேயானால் இரண்டு திறத்து உரிமைக்காரரும் வந்து கூடி இந்தப்பிள்ளைகளை ஆரிடமாகக் கையளிப்போம் என்று உசாவுதல் பண்ணி ஒருவனை நியமித்து, பிதா மாதாவினுடைய ஆதனம் முழுதையும் இந்தப்பிள்ளைகளையும் கூட அவனிடத்தில் கையளிப்பார்கள். அந்த ஆதனம் அவர்கள் கலியாணம் முடிக்கத்தக்க காலம் வருமளவும் அவன் வசமாகவே இருக்கும். இந்தப் பிள்ளைகள் வளர்ந்து விவாகம் செய்யப்பக்குவமான காலத்திலே அந்தப் பிள்ளைகளில் மூத்த பெண்பிள்ளையை முந்திக்கலியாணம் முடித்துக்கொடுக்கும்படிக்கு மறுபடியும் உறவு முறையார் வந்து கூடியிருந்து அந்தப் பெண்பிள்ளையுடைய பிதா மாதாவின் பொது ஆதனத்திலே கொடுக்கத்தக்க சீதனம் எழுதிவிப்பார்கள். அது கொண்டு அவளுஞ் சம்மதியாக வேண்டும். இந்த வகை இன்னும் வெளியரங்கமாகக் காணும்படிக்கு கலியாணம் முடியாமல் இருக்கிற மற்றும் ஆண்பிள்ளைகளை பெண்பிள்ளைகளை மூன்று பேராக வைத்துச் சொல்லுவோம். அதாவது, இரண்டு ஆண்பிள்ளையும் ஒரு பெண்பிள்ளையும் இருக்கும் போது, இந்தப் பெண்பிள்ளையானது அதிட்டக் கேட்டி னாலேயாவது யாதொரு குறைகளினாலேயோவது கலியாணம் முடியாமல் இருந்து விட்டதேயானால் ,இதற்குள்ளாக ஆண்பிள்ளைகள் வளர்ந்து கலியாணம் முடித்தார்களேயானால், அந்தச் சகோதரி காலம் சென்று போனதன் பிதாமாதா பின் வைத்துப்போன பொது ஆதனங்களிலே தன் பங்கு தரவேண்டும் என்று கேட்டால், உறவின் முறையாராகுதல் அந்த ஆதனத்தைக் கையாடியிருக்கிற பேர்களாகுதல் அதற்கெதிரிடை சொல்லாமல் கொடுக்கவேண்டியது. அப்போது இந்த ஆண் பிள்ளைகள் கலியாணம் முடியாமல் இருக்கிற தங்கள் சகோதரமான பெண்பிள்ளைக்குச் சற்றதிகப் பங்கு கொடுக்கிறதற்குச் சம்மதிக்க வேண்டும். ஆனாலும் பிரதானமாய் ஆதனம் கொஞ்சமாய் இருக்கும் போது அண்ணன் தம்பிமாராயிருக்கிற பேர்கள் இது காரியத்திற்கு மெத்தவும் எதிரிடையாய் இருப்பார்கள். அதேனென்றால் இந்தக்கலியாணம் முடியாமல் இருந்த பெண்பிள்ளை மரணித்தவுடனே இவள் ஆண்ட ஆட்சிப்படிக்கு, கலியாணம் முடித்திருந்த உடன்பிறந்தாள் இருந்தால் அவள் வந்து சகலமும் தன் வசமாக்கிக் கொள்வாளென்கிறதைக் குறித்துத்தான். (தொடரும்)



சுப்பிரமணியம் பூங்கா புனரமைக்கப்பட்டு வரும் காட்சியினை படத்தில் காணலாம். இவ் புனரமைப்புக்கு யுனிசெவ் நிறுவனம் 1860,000 ரூபா நிதியினை வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (படம்: சாந்தன்)

## சு.ப. – பியூறு ஹெவ்டே அடுத்த வாரம் சந்திப்பு

(மாங்குளம்)

இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் அடுத்த வாரம் வன்னிக்கு விஜயம் செய்யவுள்ளார்.

உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு வன்னிக்கு விஜயம் செய்யவுள்ள கண்காணிப்புக் குழுவின் தலைவர் ரொன் பியூறு ஹெவ்டே, கிளிநொச்சியில் வைத்து தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேச்சு வார்த்தைகளை நடத்துவார்.

இதன்போது இராணுவம் மற்றும் விடுதலைப் புலிகளிடையே யுத்தநிறுத்தத்தை கடைப்பிடிக்கின்ற தன்மைகள், அதன் எதிர்கால நடைமுறைகள் என்பன தொடர்பாக ஆராயவுள்ளனர்.

இதேவேளை, இருவாரகால விஜயமொன்றை மேற்கொண்டு ஐரோப்பிய மற்றும் ஸ்கன்டிநேவிய நாடுகளுக்குச் சென்றுள்ள சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் எதிர்வரும் திங்கட்கிழமை தாயகம் திரும்புவர் என எதிர்பார்க்கப்படுகிறது. (தி-63,4)

## வணிக பீடத்துக்கு மேலும் 7 பேர் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ வர்த்தக பீடத்திற்கு மேலும் 7 பேர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களின் பெயர் விபரங்கள் பின்வருமாறு;

சி.பாலசிங்கம், எஸ்.சந்திரமோகன், என்.தனுஷா, சீ. பி. ஜே. சுகித்திரா, ஏ.கார்த்திகா, ஏ.மகேந்திரன், எஸ்.சுகந்தி. (தி-4)

## பேரினவாதத்துக்கு எதிராக தமிழர்கள் ஒன்றுபட வேண்டும்

### அடைக்கலநாதன் எம்.பி. அழைப்பு

(கொழும்பு)

தமிழ் மக்களின் உரிமைகளை மறுத்து வரும் சிங்களப் பேரின வாதிகளின் போக்குகளுக்கு எதிராக செயற்படுவதே தமிழர்களின் இன்றைய குறிக்கோளாகும்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. இவ்வாறு தெரிவித் துள்ளார்.

இலங்கையில் உள்ள சகல தமிழ்க்கட்சிகளையும் குழுக்களையும ஒன்றிணைக்கும் வகையில் கொழும்பில் நடைபெற்ற முதலாவது கூட் டத்தில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இதனைத் தெரி வித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்,

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் -ஜே.வி.வியும் இணைந்து செய்துள்ள கூட்டமைப்பின் மூலம் சிங்களப் பேரினவாத சக்திகள் யாவும் ஒரு குடையின் கீழ் வந்து பலம் பெற்றுள்ளன.

இந்த சவாலுக்கு முகம் கொடுக்கவேண்டுமானால் பிராந்திய வேறுபாடுகளை மறந்து தமிழ்மக்கள் அனைவரும் ஒன்றுபடுவதே ஒரே வழி என்றார். (தி-60,10)

## படகு கவிழ்ந்து மூவர் உயிரிழப்பு

(அனுராதபுரம்)

படகு கவிழ்ந்ததில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் நீரினுள் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் அம்பலாங்கொடவில் உள்ள தொடந்துவப் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த மூவர் உயிரிழந்துள்ளனர்.

இச்சம்பவம பற்றி மேலும் தெரியவருவதாவது;

மேற்படி பகுதியிலுள்ள நீர்நிலையொன்றில் ஒரே குடும்பத்தவர்களான தந்தையும் இரு மகன்மார்களும் படகுச் சவாரி விளையாட்டில் ஈடுபட்டிருந்தனர். இதன்போது திடீரென இப்படகு கவிழ்ந்ததாலேயே இவர்கள் மூவரும் உயிரிழந்துள்ளனர். (தி-60,4)

அறிவுடையார் எல்லாம் உடையார்அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர். -குறள்

வலம்புரி

## வாக்குறுதிகளை நம்பி ஏமாந்து போவதா?

வலிகாமம் வடக்கு, வலிகாமம் தெற்கு, தென்மராட்சி ஆகிய பிரதேசங்களில் மீளக்குடியமர அனுமதிக்குமாறு கோரி நடந்த சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டம் எந்தவித முடிபுகளுமின்றி முடிந்து போனது.

உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் மக்களின் வாழ்விடங்கள் ஆக்கிரமிக்கப்பட்டிருப்பதால் அப்பகுதியில் வாழ்ந்த மக்கள் அகதி முகாம்களில் தங்கள் காலத்தைக் கழிக்கின்றனர்.

சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்ட போதிலும் உயர்பாதுகாப்பு வலயத்தை கைவிடுவதற்கு, இராணுவம் தயாராகவில்லை. தமிழர்களின் குடியிருப்புக்கள் இராணுவத்தின் அரண்களாக மாற்றப்பட்டுளளதெனில் இங்கு அடிப்படை மனித உரிமை எவ்வாறு பாதுகாக்கப்பட்டுள்ளதென்பது புலனாகும்.

அரசும் விடுதலைப் புலிகளும் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டு யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடித்து வருகின்ற போதும், தங்கள் சொந்த இருப்பிடங்களை விட்டு வெளியேறிய மக்கள் இன்னமும் தங்களின் வீடுகளுக்குத் திரும்ப முடியவில்லை. விடுதலைப் புலிகளும் அரசும் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் ஒப்பந்தம் கைச்சாத்தாகி மூன்று மாதங்களுக்குள் தமிழர் தாயகத்தில இயல்பு நிலையை ஏற்படுத்த வேண்டும்.

ஆனால், அது இன்னமும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. இதனால் யுத்தம் நிறுத்தப்பட்டுள்ள போதிலும் இடம் பெயர்ந்த மக்களின் வாழ்வியல் பிரச்சினைகள் தொடர்கதையாகவேயுள்ளது.

இதன்காரணமாக இடம் பெயர்ந்து நலனோம்பு நிலையங்களில் வாழ்கின்ற மக்கள் தங்கள் இருப்பிடங்களில் மீளக்குடியமர்வதற்கு அனுமதிக்கக் கோரி சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டத்தை தெல்லிப்பழை பிரதேச செயலகத்தின் முன்பாகவும், தென்மராட்சி பிரதேச செயலகத்தின் முன்பாகவும் நடத்தினர்.

மூன்று நாட்கள் உண்ணாவிரதப் போராட்டம் தொடர்ந்த போதிலும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் விசேட பிரதிநிதி யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்ததோடு உண்ணாவிரதப் போராட்டம் கைவிடப்பட்டது. பிரதமர் வழங்கிய உறுதி மொழி என்ன என்பது இதுவரை வெளிப்படையாகத் தெரியவரவில்லையாயினும், உண்ணாவிரதப் போராட்டம் கைவிடப்பட்டது. அகிம்சை வழியில் முன்னெடுக்கப்படும் போராட்டங்கள், வாக்குறுதிகள் வழங்கப்படுவதோடு முடிபுக்குக் கொண்டுவரப்படுவதும் பின்னர் வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமல் போவதும் சர்வ சாதாரண நிகழ்வாகிவிட்டது.

இப்படியே அகிம்சை வழிப்போராட்டங்களை முன்னெடுப்பதும் பின்னர் போலியான வாக்குறுதிகளை நம்பி போராட்டங்களைக் கைவிடுவதும் பொது மக்களை ஏமாற்றும் வித்தையாகவே நடந்து வருகிறது. இதில் வேடிக்கை என்னவெனில் பாராளுமன்ற உறுப்பினர்களே முன்னின்று போராட்டங்களை ஆரம்பித்து வைத்துவிட்டு பின்னர் அவர்களே சடுதியாகப் போராட்டங்களை முடிபுக்குக் கொண்டு வரும் முயற்சியில் ஈடுபடுவது தமிழகத்து திரைப்படத்தின் சில காட்சிகள் போல் அமைந்துள்ளது.

உயர் பாதுகாப்பு வலயத்தில் மக்களை மீளக் குடியமர்த்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக இருந்தால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா அதனை எப்போதே செய்திருக்க முடியும். ஆனால் அதுவிடயத்தில் அவர் எதனையுமே செய்யவில்லை.

பாதுகாப்பு அமைச்சு ஐக்கிய தேசிய முன்னணி அரசிடம் இருந்த போதிலும் உயர்பாதுகாப்பு வலயம் பற்றிய முடிபுகளை எடுக்கும் அதிகாரத்தை யாழ். குடாநாட்டுத் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவே கொண்டிருந்தார். இது விடயத்தில் அவரைக் கட்டுப்படுத்த பிரதமரோ அன்றிப் பாதுகாப்பு அமைச்சராக இருந்த திலக்மாரப்பனவோ முன்வரவில்லை. இதற்குக் காரணம் உயர் பாதுகாப்பு வலயத்தை அவர்களும் ஏதோ ஒரு வகையில் ஏற்றுக் கொண்டிருந்ததேயாகும், உயர் பாதுகாப்பு வலயம், தமிழ் மக்களின் வாழ்விடங்களோடு தொடர்புபட்ட பிரச்சினையாக இருந்தபோதிலும் இந்தியாவின் முன்னாள் இராணுவத் தளபதியாக இருந்த சதீஸ் நம்பியாரை வரவழைத்து உயர் பாதுகாப்பு வலயத்தில் மக்களை குடியமர்த்தும் முடிபை எடுக்குமாறு கூறப்பட்டமை தமிழ் மக்களை இரண்டாந் தரப் பிரஜைகளாக கருதிய ஒரு நடவடிக்கையாகும். ஆக, வெறும் வாக்குறுதிகளை நம்பி போராட்டங்களைக் கைவிடுவதைவிட போராட்டங்களை ஆரம்பிக்க முதல் அதுபற்றி ஆராய்ந்து தொடர்வதே நல்லதாகும்.

# ஜே.வி.பியுடனான கூட்டு புதிய முன்னணிக்கு நல்லதல்ல

## காரணம் கூறுகிறார் வசீர் சேகுதாவுத்

(ஏறாவூர்)

அம்பாறை மாவட்டத்தை முஸ்லிம் மக்களின் பிரதேசமாக பிரகடனப்படுத்தவேண்டும் என்ற முஸ்லிம் மக்களின் கோரிக்கைகளுக்கு எதிராகக் குரல் எழுப்பிய மக்கள் விடுதலை முன்னணியுடன் தேசிய ஐக்கிய முன்னணி என்ன நோக்கத்திற்காக இணைந்து கொண்டது.

இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளரும் அமைச்சருமான வசீர் சேகுதாவுத் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஏறாவூரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது பற்றி அங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அவர்,

முஸ்லிம் மக்கள் அம்பாறை மாவட்டத்தில் தம் தனித்துவத்தை நிலைநாட்டிக் கொள்வதற்காக ஆவல் கொண்டு இருந்தனர். இது தொடர்பாக முஸ்லிம் காங்கிரஸ் கட்சி இதற்குரிய சில முக்கிய முடிவுகளை எடுத்ததன் மூலம் அதனை நிறைவேற்றக்கூடிய சூழ்நிலையும் காணப்பட்டது.

ஆனால் இதற்கு ஆட்சேபம் தெரிவித்து ஜே.வி.பியினர் ஆர்ப்பாட்டங்களிலும், எதிர்ப்புப் போராட்டங்களிலும் ஈடுபட்டனர்.

இது மட்டுமன்றி தென்னிலங்கைப் பேரினவாதிகளை ஒன்று திரட்டி முஸ்லிம்களின் கோரிக்கைகளுக்கு முடிவு கட்டினர்.

முஸ்லிம்களின் குறைந்த பட்ச அபிலாஷைகள் கூட நிறைவேறுவதை விரும்பாத ஜே.வி.பியினர் அங்கம் வகிக்கும் மக்கள் ஐக்கிய சுதந்திர முன்னணியுடன் தேசிய ஐக்கிய முன்னணி எதற்காக இணைந்து கொண்டது? எனக் கேள்வி எழுப்பினார்.

இக் கூட்டு முயற்சி எதிர்காலத்தில் முஸ்லிம் மக்களின் அபிலாஷைகளுக்குப் பெரும் முட்டுக்கட்டையாக அமையும் எனவும் குறிப்பிட்டார். (தி-63,4)

# புதிய கூட்டணியை பதிவு செய்வதில் சட்டச் சிக்கல்கள் எதுவுமில்லை

## தேர்தல் திணைக்களம் அறிவிப்பு

(கொழும்பு)

ஜே.வி.பியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து அமைத்துள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை ஓர் அரசியல் கட்சியாக பதிவு செய்வதில் எவ்வித சட்டப் பிரச்சினைகளும் இல்லை என தேர்தல் ஆணையாளர் அலுவலகம் அறிவித்துள்ளது.

இப் புதிய கூட்டணியைப் பதிவு செய்வதற்காக விண்ணப்பம் ஒன்று தேர்தல் ஆணையாளர் திணைக்களத்தில் நேற்று முன்தினம் சமர்ப்பிக்கப்பட்டது.

இது குறித்து தேர்தல் திணைக்கள அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்,

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்துவதற்கு வேட்பாளர் நியமனப்பத்திரங்கள் தற்போது கோரப்பட்டுள்ளதால், புதிய அரசியல் கட்சி ஒன்றைப் பதிவு செய்வது என்பது இயலாத விடயம்.

ஆனால், ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட கட்சி ஒன்றின் பெயரையும், சின்னத்தையும் மாற்றுவதற்கு எவ்வித தடையும் இல்லை.

இதற்கமைய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் உறுப்பினர்கள் சிலர் தமது கட்சியின் பெயரை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி என்று மாற்றுவதற்கு உடன்பட்டுள்ளனர்.

இதன் அடிப்படையில் தான் இப் புதிய கூட்டணி இனி நடைபெறவுள்ள தேர்தல்களில் போட்டியிட முடியும் என்றார். (தி-63)

## பிரதமர் தலைமையிலான குழு நாளை தாய்லாந்து பயணம்

(கொழும்பு)

இலங்கைக்கும் தாய்லாந்துக்கும் இடையில் வர்த்தக நடவடிக்கைகளை பலப்படுத்தும் வகையிலான செயற்திட்டங்களை மேற்கொள்ளவென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான உயர்மட்ட வர்த்தகக் குழுவொன்று நாளை திங்கட்கிழமை தாய்லாந்துக்குப் பயணமாகவுள்ளது.

இக்குழுவினர் மூன்று நாட்கள் தாய்லாந்தில் தங்கியிருக்கும் காலத்தில், இரு நாடுகளுக்கும் இடையில் மேற்கொள்ளப்படவுள்ள வர்த்தக நடவடிக்கைகள் தொடர்பான உடன்படிக்கைகள் பலவற்றில் கைச்சாத்திடவுள்ளனர்.

அத்துடன் , இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் வர்த்தக முதலீட்டு நடவடிக்கைகள் தொடர்பாக தாய்லாந்து வர்த்தக முதலீட்டு சமூகத்துடன் கலந்துரையாடி இங்கு மேற்கொள்ளப்படவேண்டிய வர்த்தகச் செயற்பாடுகள் குறித்தும் விரிவாக ஆராயப்படவுள்ளன.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான உயர்மட்ட வர்த்தக மற்றும் கைத்தொழில் தூதுக்குழுவின் தற்போதைய தாய்லாந்து பயணத்தின் மூலம் இலங்கைக்குப் பல நன்மைகள் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. (தி-18)

### ஓம் தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

உண்மை, தூய்மை, சுயநலமின்மை ஆகிய இந்த மூன்றும் எங்கெல்லாம் காணப்படுகின்றனவோ, அவற்றைப் பெற்றிருப்பவர்களை நசுக்கக் கூடிய ஆற்றல் விண்ணுலகிலோ மண்ணுலகிலோ எங்குமே கிடையாது. இந்த மூன்றையும் பெற்றுள்ள ஒருவனைப் பிரபஞ்சம் முழுவதுமே எதிர்த்து நின்றாலும் அதை எதிர்த்து நிற்கக் கூடிய ஆற்றல் அவனுக்கு உண்டு.

சுவாமி விவேகானந்தர்

## கணவனைக் காணவில்லையென ம.உ.ஆ. குழுவில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

சாரதி அனுமதிப் பத்திரம் பெறுவதற்காக கொழும்பு சென்ற தனது கணவனைக் காணவில்லையென அவரது மனைவி மனிதஉரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

முள்ளிவீதி, அரியாலையைச் சேர்ந்த தெய்வேந்திரம் முரளிதரன் (வயது 27) என்பவரே இவ்வாறு காணாமல் போயுள்ளார்.

இதேவேளை, மேற்படி நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளதாகவும், இவரைப் பொலிஸார் எதிர்வரும் 13 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜர் செய்வர் எனவும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் அவரது மனைவிக்கு அறிவித்துள்ளது. (தி-3)

## விண்ணப்பம் கோரல

(கண்டி)

மத்திய மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் சகல பாடங்களுக்குமான ஆசிரிய ஆலோசகர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மத்திய மாகாணத்தின் கண்டி, நுவரெலியா, மாத்தளை ஆகிய மாவட்டங்களில் உள்ள கல்வி வலயங்களில் கடமையாற்றுவதற்காகவே இவ்விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தற் பொழுது ஆசிரியர் சேவையில் உள்ள 50 வயதுக்கு மேற்படாத ஆசிரிய சேவைத் தரம் II ஐச் சேர்ந்தவர்கள் அல்லது 10 வருட ஆசிரியசேவை அனுபவம் உள்ளவர்கள் அல்லது பட்டம் பெற்ற கல்வி டிப்ளோமா ஆசிரியர்களும் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

இதற்குரிய விண்ணப்பங்கள் யாவும் இம்மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பதாரிகள் தற்பொழுது கடமையாற்றும் கல்வி வலயங்களின் பணிப்பாளர்களூடாக பாடசாலை அதிபர்களின் சிபாரிசுகளுடன் அனுப்பிவைக்குமாறு மத்திய மாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளர் விஜய பண்டார ரட்ணாயக்க கேட்டுள்ளார். (தி-60,4)

## கலாசாரவிழா இவ்வாண்டு யாழில்

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் விளை யாட்டுத்துறை அமைச்சினால் நடாத்தப்படும் கலாசார விழா இம்முறை யாழ்ப்பாணத்தில் நடாத்தப்படவுள்ளதாக யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

கலை கலாசார பராம்பரியங்களை வளர்க்கும் நோக்கில், வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சினால் வருடந்தோறும் நடாத்தப்பட்டுவரும் இக் கலாசார விழாவானது கடந்த ஆண்டு வவுனியாவில் மிகச்சிறந்த முறையில் கொண்டாடப்பட்டது.

ஆயினும், அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் புரிந் துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப் பட்டதன் பின்னர் இங்கு நிலவும் சுமுகமான சூழ்நிலையை அடுத்து, இவ்வாண்டில் காலாசார விழா யாழ்ப்பாணத்தில் நடாத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(தி-3)

# இலங்கையில் முதலீட்டை அதிகரிக்க யப்பான்-தாய்வாந்தில் மாநாடு

(நமது நிருபர்)

இலங்கையில் வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவித்து அதிகரிப்பதை இலக்காகக் கொண்ட இரண்டு மாநாடுகள் யப்பானிலும், தாய்லாந்திலும் நடைபெறவுள்ளது.

தாய்லாந்தில் நடைபெறவுள்ள முதலீட்டு மாநாட்டில் பிரதமர் ரணில விக்கிரமசிங்கா தலைமையில் முதலீட்டாளர் குழுவொன்று பங்குபற்றவுள்ளது. இக்குழுவில் இலங்கை முதலீட்டு சபையின் அதிகாரிகள் குழுவினரும் இடம்பெற்றுள்ளனர்.

தாய்லாந்தின் தலைநகர் பாங்கொக்கில் எதிர்வரும் வியாழக்கிழமை இம்மாநாடு நடைபெறவுள்ளது.

இதேவேளை யப்பானில் டோக்கியோ நகரில் நடைபெறவுள்ள இன்னுமொரு முதலீட்டாளர் மாநாட்டிற்கு பொருளாதார மறுசீரமைப்பு விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் மிலிந்த மொறகொட தலைமையில் முதலீட்டாளர் குழுவொன்றும் பங்குபற்றவுள்ளது. (ம)

# அரச ஊடகத்துறையை சுயாதீனமாக்குவதற்கு வரவேற்பு

(கொழும்பு)

அரச ஊடகத்துறையை சுயாதீன நிறுவனங்களாக்குவதென்று பிரதமரால் முன்வைக்கப்பட்ட பிரேரணைகளை சுதந்திர ஊடக இயக்கம் வரவேற்றுள்ளது. அதே வேளை 2மாதங்களுக்கு முன் ஜனாதிபதியால் முன்வைக்கப்பட்ட அரச ஊடக சீர்திருத்தங்களையும் அது வரவேற்றுள்ளது.

தற்போதைய அரசியல் நெருககடி காரணமாகவே இம் முடிவை இரு தலைவர்களும் எடுத்துள்ளார்கள். தற்போதைய நெருக்கடிக்கு மட்டுமின்றி நீண்ட கால நோக்கில் ஜனநாயகத்திற்கும் நல்லாட்சிக்கும் இந் நாட்டின் ஊடகத்துறையில் ஜனநாயகம் நிலை நிறுத்தப்படல் வேண்டும். பெப்ரவரி 2ல் வெளியாகிய பிரதமரின் பிரேரணையில் சகல அரச ஊடகங்களையும் கண்காணிக்க சுயாதீன மேற்பார்வைக் கவுன்சில் நியமிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

இக்கவுன்சில் பற்றிய விடயங்கள் இம் மாத இறுதிக்குள் பூர்த்தியாக்கப்பட்டுவிடும்.

அரச ஊடகத் துறையைப் பொதுச் சேவை நிறுவனமாக்க வேண்மென கடந்த நவம்பரில் ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

இந் நிலையில் நல்லாட்சியை உருவாக்கும் வகையிலாலான நான்கு சுயாதீன ஆணைக் குழுக்களையும் உருவாக்கி அவற்றைப் பலப்படுத்துவதென இரு தலைவர்களும் எடுத்த முடிவினை இவ் இயக்கம் வரவேற்றுள்ளது. (ந-6)


திங்கள், வியாழன் தோறும்
உங்கள் வலம்புரியில்

விவாத அரங்கு

கருத்துச் சங்கமம் - 02

விடயம் :
தமிழ்ப்பண்பாட்டு விழுமியங்களை - சமூகப் பெறுமானங்களை பாதுகாப்பதில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் தவறிவிட்டது - தவறவில்லை

உங்கள் வாதப் பிரதிவாதங்களை
விரைவாக அனுப்பிவையுங்கள்

விவாத அரங்கிற்கு மேற்படி விடயத்தை முன்வைத்தவர்
வித்தகன்
யாழ்ப்பாணம்

வாசகர்களே நீங்களும் விவாத அரங்கிற்கு விடயப் பொருளை முன்வைக்க முடியும்



அன்பு மாணவர்களே!
உங்கள் வலம்புரியில்
மிக விரைவில் எதிர்பாருங்கள்

சுந்தரின்

5-ம் தர புலமைப் பரீட்சை மாதிரி வினாத்தாள்கள்.

மு.குறிப்பு: 5-ம் தர புலமைப்பரீட்சை வினாத்தாள்களைப் பெற விரும்பும் பாடசாலை அதிபர்கள்,

நிர்வாக உத்தியோகத்தர்,
வலம்புரி
இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம்.

எனும் முகவரியுடன் தபால் மூலமாகவோ, அன்றி நேரிலோ தொடர்பு கொள்ளவும்.

நிர்வாக உத்தியோகத்தர்.


## பாராளுமன்றம்...

வுக்கும் இடையில் அரசியல் அதிகார இழுபறி நிலை ஏற்பட்டது. இந் நிலையில் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையிலான அரசியல் அதிகார இழுபறியை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்குடன் அமைக்கப்பட்ட மனோதித்த வெல-மலிக்சமரவிக்கிரம தலைமையிலான உயர் மட்ட அதிகாரிகள் குழு முன்னெடுத்த சமரச முயற்சிகள் எதுவும் பயனளிக்காது போனது.

இதேவேளை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி)யுடன் புரிந்துணர்வு உடன்படிக்கையை ஏற்படுத்தி ஐம்பெரும் கோட்பாடுகளுடன் 'ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி' உருவாகியது.

பொதுத்தேர்தல் ஒன்றை மையமாக வைத்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உருவாக்கப்பட்ட இரு வார காலத்துக்குள் பாராளுமன்றைக் கலைப்பதற்கான அறிவித்தலை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தனது விசேட அதிகாரத்தின் மூலம் நேற்று நள்ளிரவு வெளியிட்டதுடன், விசேட வர்த்தமானியை அச்சிடும் உத்தரவை அரச அச்சக கூட்டுத்தாபனத் தலைவர் நெவில் நாணயக்காராவுக்கு பிறப்பித்தார்.

பாராளுமன்ற கலைப்பு அறிவித்தலை அடுத்து இம் மாதம் 17ம் திகதி செவ்வாய்க் கிழமை முதல் 24ம் திகதி செவ்வாய்க்கிழமைக் கிடையில் பொதுத் தேர்தலுக்கான வேட்பாளர் நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யலாம் என்றும் ஏப்ரல் மாதம் 2ம் திகதி வெள்ளிக் கிழமை தேர்தல் நடைபெற்று 22ம் திகதி வியாழக்கிழமை 13வது பாராளுமன்றம் கூடும் என்றும் விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியாகியுள்ளது.

கலைக்கப்பட்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசினால் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் முன்னெடுக்கப்பட்ட சமாதானப் பேச்சுவார்த்தை கடந்த 10 மாதங்களுக்கு மேலாகிய நிலையிலும் தமிழீழ விடுதலைப் புலிகளால் முன் வைக்கப்பட்ட தன்னாட்சி அதிகாரமுள்ள இடைக்கால நிர்வாக சபை குறித்து கருத்து எதனையும் அரசு முன் வைக்காத நிலையில் பாராளுமன்றம் கலைக்கப்பட்டமை துரதிஷ்டமானதென அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இது இவ்வாறிருக்க தென்னிலங்கை அரசியல் நெருக்கடியினாலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஜே.வி.பிகூட்டினாலும் பாராளுமன்றம் உடனடியாகக் கலைக்கப்படலாம் என்று 'வலம்புரி' ஏற்கனவே செய்தி வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## திருகோணமலை...

வுள்ளார்.

இச் சந்திப்புக்களைத் தொடர்ந்து நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை அம்பாறை மாவட்டத்திற்கும், புதன்கிழமை மட்டக்களப்பு மாவட்டத்திற்கும் அவர் விஜயம் செய்யவுள்ளார். (ம)

## கிழக்கு..

வருவதாகவும் இதனால் பல்கலைக் கழகத்தின் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள் ளதாகவும் பல்கலைக் கழக வட்டாரங்கள் கவலை வெளியிட்டுள்ளன. (வ)

# பிரதேச செயலகத்திற்கு பொலிஸ் காவல்

(காரைநகர்)

காரைநகர் பிரதேச செயலக கட்டட பாதுகாப்பிற்கு பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

உடுவில் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் போல் யாழ்.மாவட்டத்திலுள்ள ஏனைய பிரதேச செயலகங்களிலும இடம்பெறலாம் என்பதை அடுத்தே காரைநகர் பிரதேச செயலகத்திற்கு பொலிஸ் காவல் போடப்பட்டிருப்பதாக ஊர்காவற்றுறை பொலிஸா தெரிவித்துள்ளனர். (வ-246)

## எந்தத்...

இக் கலைப்பு இடம் பெற்றிருப்பதே அதற்குக் காரணம் ஆகும்.

எந்த தேர்தலையும் எமது ஐக்கிய தேசியக் கட்சி சந்திக்கத் தயாராகவே உள்ளது. என்னைப் பொறுத்தவரை இரண்டு தேர்தல்களை ஏற்கனவே சந்தித்திருக்கிறேன். இது மூன்றாவது தேர்தல், மக்களுக்கு என்னாலான சேவையை மக்கள் சேவகன் என்ற வகையில் மிகச் சிறப்பாக ஆற்றியிருக்கிறேன்.

வரப்போகின்ற தேர்தல் எமது கடந்தகாலச் சேவையை வெளிப்படுததப் போகின்ற களமாக அமையப் போகிறது என்றே நான் கருதுகின்றேன்.

தமிழ் மக்கள் சற்று ஆறுதலடைந்திருக்கின்ற இவ் வேளையில் இப் பாராளுமன்றக் கலைப்பு ஒரு நெருடலையே ஏற்படுத்தியுள்ளதென்றும் அமைச்சர் மகேஸ்வரன் கூறினார். (இ)

## சுதந்திர....

கையளிக்கப்பட்டுள்ளது.

தலைவர்கள் தெரிவில் புதிய கூட்டணி உருவாக்கப்படுவதற்கு முன் நின்று உழைத்த எதிர்க் கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவும், நிமால் சிறிபால டி. சில்வாவும் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ச-6)


வெளிநாடுகளில் வசிக்கும் உறவுகளிடமிருந்து
WESTERN UNION MONEY TRANSFER
மூலம்
சில நிமிட நேரத்தில் உங்கள் கைகளில் பணம் கிடைக்க
எம்மிடம் நாடுங்கள்
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303 K.K.S. வீதி, யாழ்ப்பாணம
T.P : 021 222 5392
Fax : 222 3214
E.mail : smskr@eureka.lk
சிவன் கோவில் வீதி, காரைநகர்
T.P : 0602212472


# இந்திய போர் விமான விபத்தில் விமானி பலி

(புதுடில்லி)

இந்திய விமானப்படைக்குச் சொந்தமான எம்.ஐ.ஜி.23 ரகப் போர் விமானம் ஒன்று விபத்துக்குள்ளானதில் விமானி உயிரிழந்துள்ளார்.

இராஜஸ்தான் மாநிலத்தின் மேற்குப் பகுதியில் ஏற்பட்டுள்ள இந்த விமான விபத்தையடுத்து அது தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக விமானப்படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை, விமான விபத்து தொடரில் கடந்த பத்து வருட காலத்தில் இதுவரை 170 எம்.ஐ.ஜி ரக விமானங்கள் விபத்துக்குள்ளானதாக இந்திய விமானப்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.(ம)

# மணிவிழா

(பொன்னாலை)

மூளாய் இந்து இளைஞர் மன்றத்தின் மணிவிழா இன்று பிற்பகல் 4.30 மணிக்கு, மூளாய் பிரசாந் அரங்கில் மன்றத்தலைவர் தி.நடனசபை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் கலந்துகொள்ளவுள்ளார் (ச-49)

## ஹண்டர்..

கொண்டிருந்த ஹண்டர் வாகனமும் குஞ்சுக்குளம் மாங்குளம் பகுதியில் மோதி விபத்துக்குள்ளானதாகக் கூறப்படுகின்றது.

இச்சம்பவம் குறித்து தமிழீழ காவல்துறையினர் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (இ-37)

# இதய அஞ்சலி



எம் சங்கத்தின் சாரதியாய் நீ
சளைக்காது பணி புரிந்தாய்!
பொருளாளனாய் பல்லாண்டுகள்
பொறுப்புடனே சேவை செய்தாய்!
இடம்பெயர்வின் போது கூட
இடுக்கண் பல களைந்தாய்!
காய்ச்சலோடு போன உன்னை
காலன் ஏன் பறித்தானோ!
இங்கு ஏங்கி நின்று தவிக்கின்றோம்-உன்
இன் முகத்தை இனி எங்கு காண்போம்!

எமது சங்கத்தின் பொருளாளராக பல்லாண்டுகள் பணியாற்றிய பெருந்தகை உயர் திரு.

## செல்லையா பாலசுப்பிரமணியம்

அவர்கள் அமரத்துவம் அடைந்தமையினையிட்டு அன்னார்க்கு எமது இதய அஞ்சலியையும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அங்கத்தவர்கள்
நாவற்குழி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம்
நாவற்குழி

(சி-7366)


யாழ்ப்பாணத்தில் 72 வருடகால அனுபவம் பெற்ற மதுபான விற்பனையாளர்கள் மீண்டும் வாடிக்கையாளர் நலன் கருதி
243 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரியில் விற்பனையை ஆரம்பித்துள்ளார்கள்
உள்நாட்டு வெளிநாட்டு மதுபான வகைகளை பெற்றுக் கொள்ள நாடுங்கள்
ஆ.வேலுப்பிள்ளை அன் சன்ஸ்
243 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் ஸ்தாபிதம் - 1932
(சி-7352)


இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.02.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.